விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 04 புதன்கிழமை (17.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

வட-கிழக்கில் இடைக்காலப் பொறிமுறை

# தமிழர் கோரிக்கையை நிராகரித்தார் கோத்தா

**வடக்குக் கிழக்கில் சர்வதேச கண்காணிப்பின் கீழ் ஒரு இடைக்காலப் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என தமிழர் தரப்பு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் வலியுறுத்திய கருத்தை பாதுகாப்புத் துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.**



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந்தியாவால் நடைமுறைப்படுத்தப்பட்ட 13-வது திருத்தச்சட்டம் ஒருபோதும் தீர்வாக அமையாது எனவும் தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனப்படுகொலையை தடுப்பதற்கு சர்வதேச நாடுகளின் கண்காணிப்பின் கீழ் ஒரு இடைக்கால நிர்வாக சபையை இந்தியா முன்னின்று உருவாக்க வேண்டும் எனவும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சந்தித்த தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் தமிழர் தரப்பால் தமக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய (20ஆம் பக்கம் பார்க்க)

சர்ச்சையை கிளப்பும் கைதடி சிறுவர் இல்லம்

## காணாமல்போன 16 சிறுமிகளில் 12 பேரே மீட்பு

7 பேருக்கு வைத்திய பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

கைதடி சிறுவர் இல்லத்தில் இருந்து காணாமல் போன.16 சிறுமிகளில் 12 பேர் நேற்றுவரையில் மீட்கப் பட்டுள்ளனர்.

இதில் 7 பேர் வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தனர்.

இல்ல பொறுப்பதிகாரி கைது

அதேவேளை, குறித்த சிறுவர் இல்லத்தின் பொறுப்பதிகாரியை சாவகச்சேரிப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பகுதியில் உள்ள தனியார் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 35 சிறுமிகளில் 16 பேர் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இல்லத்தை விட்டு வெளியேறி காணாமல் போயிருந்தனர்.

சிறுவர் இல்லத்தைவிட்டு வெளியேறிய குறித்த பதின்ம வயதுச் சிறுமிகள் 16 பேரும் எங்கு சென்றனர்.என்ன காரணத்திற்காக விடுதியை விட்டு வெளியேறிக் காணாமல் போயிருக்கிறார்கள் என்பது தொடர்பாக தகவல்கள் அறியப்படாத நிலை காணப்பட்டது.

அத்தோடு பொலிஸ் தரப்பிலும், சிறுவர் இல்லத்தின் தரப்பிலும் மாறுபட்ட தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன.

இதுதவிர பொறுப்புக்கூற வேண்டிய பதவி நிலை உத்தியோகத்தர்களும் தமது பதவிக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் காரணமாக (19ஆம் பக்கம் பார்க்க)

### அனைத்து சிறுமிகளும் இடமாற்றப்பட்டனர்

கைதடி சிறுவர் இல்லத்தில் இருந்து அனைத்து சிறுமிகளும் நேற்று மாலை அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கைதடியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்தில் இருந்து 16 சிறுமிகள் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் அங்கிருந்து வெளியேறி காணாமல் போயிருந்தனர்.

இதனையடுத்து குறித்த சிறுவர் இல்லத்திலிருந்த அனைத்து சிறுமிகளும் நேற்று மாலை வேறு சிறுவர் இல்லங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் யாழ். சிறுவர் நீதிமன்ற நீதவானின் உத்தரவின் பேரிலேயே இவர்கள் மாற்றப்பட்டுள்ளனர் என அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த சிறுவர் (20ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத்தை கூட்டமைப்பு கோரவில்லை!

### குழப்புகிறார் சுமந்திரன்

இடைக்கால நிர்வாகப் பொறிமுறை ஒன்றைக் கோரவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இடைக்கால நிர்வாக பொறிமுறை ஒன்றை



அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மன்னார் ஆயரும் கோரியிருந்தனர்.

எனினும் இந்தக் கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது நிராகரித்துள்ளது குழப்பதை தோற்றுவித்துள்ளது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக அலகு ஒன்றை அமைக்க வேண்டும் என தாம் கோரவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் வடக்கில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

2012 (20ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு செல்ல இருந்த குடும்பஸ்தர் கடத்தப்பட்டார்

### ம.உ. ஆணைக்குழுவில் மனைவி முறைப்பாடு

வெளிநாட்டு செல்வதற்கான வீசா கிடைத்ததை நண்பர்களுக்கு சொல்லச் சென்ற இளம் குடும்பஸ்தர் காணாமல் போயுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இளவாலை வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த பிரான்சிஸ் ஜெசிந்தன் (வயது 27) என்பவரே கடந்த 4-ம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதாக அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடானது இளவாலைப் பொலிஸ் நிலையத்திலும் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்ல இருந்த இவரை யாரும் பணத்திற்காக கடத்தியிருக்கக்கூடும் என தாம் சந்தேகிப்பதாக காணாமல் போனவரின் மனைவி தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறைப்பாட்டை அடுத்து இளவாலைப் பொலிஸார் காணாமல் போனவரைத் தேடி விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## எங்கள் பிரச்சினைகளை நாங்களே தீர்ப்போம்

### - சுசில் பிரேமஜயந்த

உள்நாட்டு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள எங்களுக்குத் தெரியும் என பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்தமைக்கு எதிராக உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் அணி திரண்டுள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றி மற்றும் பொருளாதார அபிவிருத்தியை தடுக்க சில சக்திகள் முயற்சிக்கின்றன.

நாட்டுக்கு எதிரான சூழ்ச்சித் திட்டங்களை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். நல்லிணக்கத்தை விரும்பும் மக்களே இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர்.

இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் மனித உரிமைகள் திருப்திகரமாக இல்லை!

### பிரித்தானியா மீண்டும் அதிருப்தி

இலங்கையில் மனிதவுரிமை மேம்பாடு ஜனநாயகம் மற்றும் சட்ட ஆட்சி போன்றவற்றில் பொது நலவாய அமைப்பின் கொள்கைகளைப் பின்பற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.


அத்துடன் ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமைகளை பாதுகாப்பதில் இலங்கை எதிர்மறையான வளர்ச்சிப் போக்கினையே கண்டுள்ளதாக பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகம் கவலை வெளியிட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு இலங்கையில் மனிதவுரிமை நிலைமைகள் திருப்தி அடையும் வகையில் அமையவில்லை என சுட்டிக் காட்டியுள்ள பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகம் இலங்கையில் கடந்த ஆண்டில் மனிதவுரிமைகளுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய பல பாதகமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகள் நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு எதிராக செயற்படல் மற்றும் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி திலகவர்தன பதில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அதற்கான நியமனக்கடிதம் அலரிமாளிகையில் வைத்து நேற்று வழங்கப்பட்டுள்ளது.

# கைதடி சிறுவர் விவகாரம்

# நல்லூர் கருணையில்லத்தில் 7 சிறுமிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

கைதடி சிறுவர் இல்லத்திலிருந்து வெளியேறிய 16 சிறுமியர்களில் 7 பேர் மருத்துவ பரிசோதனையின் பின்பு நல்லூர் கருணையில்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப்பகுதியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 16 சிறுமியர்கள் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இல்லத்தை விட்டு வெளியேறி காணாமல் போயுள்ளனர் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 7 சிறுமிகள் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

சிறுவர் இல்லத்தில் இருந்து வெளியேறிய சிறுமியர்களிடம் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் பொலிஸார், பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையின் போது பாலியல் ரீதியான தொந்தரவு காரணமாகவே விடுதியை விட்டு வெளியேறியதாக சிறுமிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து மீட்கப்பட்ட சிறுமியர்களை மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்திருந்தனர்.

அதிகாரிகள் மருத்துவ பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்ட சிறுமிகள் தொடர்பில் வைத்திய சாலையின் பதில் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அத்தோடு யாழ்.மாவட்ட சிறுவர் நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் நல்லூர் கருணை இல்லத்தில் சிறுமிகளும் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பதில் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (செ-6,24)

# கிளிநொச்சி வர்த்தக நிலையமொன்று முற்றாக எரிந்து நாசம்

## பெருமளவான உடமைகள் தீக்கிரை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியின் பாரிய தனியார் வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையாகி முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.


கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கு முன்பாக ஏ-9 வீதியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடத்தில் இயங்கிவரும் குமரகுரு பல்பொருள் அங்காடியே நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் ஏற்பட்ட தீப்பரவலில் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

கடையினுள் தீ பரவிய போதும் உள்ளே தீபரவுகின்றது என்பதை எவரும் அறியாத நிலையில் கடையிலிருந்து புகை வெளியேறிய போதே அருகிலிருந்தவர்கள் வர்த்தக நிலையத்தினுள் தீ பரவுவதை தெரிந்துள்ளனர்.

இதனையடுத்து அயலில் இருந்தவர்கள் தீயை அணைக்க முற்பட்ட போதும் தீ சுவாலை கடை எங்கும் பரவியுள்ளது. உடனடியாக யாழ்ப்பாணம், வவுனியா தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் தெரிவித்து சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டு தீயணைப்பு பணிகள் இடம்பெற்றுள்ளது.

எனினும் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு வருகை தருவதற்கு முன்னரே வர்த்தக நிலையத்தின் முழுப்பகுதியும் தீ பரவலுக்குள்ளானதுடன் மேல்மாடி கூரையும் எரிந்து நாசமாகியுள்ளது.

தீயணைப்பு படையினர் வரும் வரையிலும் பொதுமக்களும், பொலிஸாரும் இணைந்து தீயைக் கட்டுப்படுத்த முயன்ற போதும் தீ பெரும் புகைச்சலுடன் மிகவேகமாக பரவியுள்ளது. இத்தீப்பரவல் காரணமாக சுமார் 5 கோடி ரூபாய் பெறுமதியான வர்த்தகப் பொருட்கள் மற்றும் தளபாடங்கள் என்பன தீக்கிரையாகியுள்ளதுடன் மாடிக்கட்டிடமும் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்நிலையில் குறித்த வர்த்தக நிலையத்தின் தீ பரவலிற்கான காரணம் இதுவரையில் கண்டுபிடிக்கப்படாத நிலையில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி பிரதேச சபைகள் எவற்றிலும் தீயணைப்பு ட்ணியாளர்கள் அற்ற நிலையினாலேயே குறித்த தீப்பரவல் சம்பவத்தின்போது வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு படையினரின் உதவியை நாடவேண்டியிருந்துள்ளது.

மேலும் இவ் வர்த்தகநிலையம் தனியானதொரு கட்டடத்தில் அமைந்திருந்ததாலேயே ஏனைய வர்த்தக நிலையங்களிற்குதீ பரவுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

இவ் விபரீதத்தை தவிர்த்திருபபதற்கு கரைச்சிபிரதேச சபையிடமோ ஏனைய கிளிநொச்சியின் பிரதேச சபைகளிடமோ தீயணைப்புபடை செயற்படுத்தப்பட்டிருப்பின் தீப்பரவலால் ஏற்பட்ட விபரீதத்தை குறைத்திருக்க முடியும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-5,6,15)


## காணவில்லை

4104-0189901-0004 இலக்கமுடைய, வெள்ளை நிறமான பசு மாடு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமல் போயுள்ளது.

யாரேனும் கண்டால் கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஞான வைரவர் ஆலயத் திற்கு அறியத்தரவும்.

தொடர்பு: 0213008964, 0212221123



யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு


# சைக்கிள் குற்றம்; 35 பேருக்கு வழக்கு தாக்கல்

(கரணவாய்)

துவிச்சக்கர வண்டியில் முகப்பு வெளிச்சம், மணி பொருத்தப்படாமல் இரவு வேளைகளில் பயணம் செய்தவர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

நெல்லியடி பஸ் நிலையம், நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை 6 மணிக்கு பிற்பாடு துவிச்சக்கர வண்டிக்கு முகப்பு வெளிச்சம், மணி இல்லாமல் சென்ற 35 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு எதிராக நெல்லியடிப்பொலிஸார் நேற்று வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களை இன்றையதினம் பருத்தித்துறைநீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

ஏற்கனவே இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாரால் நெல்லியடிப் பொதுமக்களுக்கு [illegible] வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-60)


பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் : 20.08.1940 மறைவு : 16.04.2013



### திருமதி தனேஸ்வரி பரமராசா

(இல. 129 இராசாவின் தோட்டம்) யாழ்ப்பாணம்.

ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தில் பணியாளராக கடமையாற்றும் செல்வி. நகேஸ்வரியின் அன்புப் பெரியம்மா,

சுகயீனம் காரணமாக மரணமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தியாகி அறக்கொடை நிறுவனம்
ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்
பணிப்பாளர், பணியாளர்கள்.

527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(2388)

## 31ஆம் நாள் நினைவுநாள்



### அமரர் முருகேசு ராஜா (ராசா)

குழம்பதி வயிரவர் கோவிலடி, தெல்லிப்பழை

பிறப்பு : 16.06.1956
இறப்பு : 18.03.2013
திதி : ஸப்தமி

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று மதியம் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மல்லாகம் நீலியம்பதி சிறி முதலியம்மன் ஆலய தொண்டராகிய அமரர் முருகேசு ராஜா அவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் விசேட அன்னதானமும் இடம்பெறும்.

-குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞாபகம்

ஒரு நண்பர் யாருடனோ தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். கதைத்து முடிந்ததும் நான் அவரைப் பார்த்து, ''இப்போது தொலைபேசியில் கதைத்த இலக்கம் என்ன?'' என்று கேட்டேன்.

அவர் தலையை சொறிந்து கொண்டு ஞாபகம் வரவில்லை என்றார்.

''சரி சேர்! அதை விடுங்கள்... உங்கள் மனைவி பெயர் என்ன?'' என்று கேட்டேன்.

''மாலதி'' என்று கூறினார்.

''என்ன சேர் இது வேடிக்கை... சற்று நேரத்திற்கு முன்னர் கதைத்த தொலைபேசி இலக்கம் மறந்து விட்டதாக கூறினீர்கள். எப்போதோ கல்யாணம் செய்த மனைவியின் பெயரை மறக்கவில்லை. அதை சரியாகச் சொல்லி விட்டீர்கள்'' என்றார்.

அவர் என்னை ஒரு மாதிரியாக பார்த்தார். அவர் அப்படி என்னை பார்த்ததிலே ஒன்றும் பிழையில்லை. ஏனென்றால்... நாம் எல்லோருமே அப்படித்தானே!

ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக தொலைபேசியில் கதைக்கிறோம். அதன்பின் கிடைக்கப் பெற வேண்டிய காரியம் முடிந்தவுடன் அந்த இலக்கம் நமக்கு அநாவசியமாகி விடும். அதனாலே மறந்து விடுகிறோம்.

இதற்குப் பெயர் தான் ''தற்காலிக 'ஞாபகம்'' ஆகும். அதற்காக மனைவியினுடைய பெயரை மறக்க முடியுமா... அதை அடிக்கடி உபயோகப்படுத்துகிறோம்... அதனாலே மறப்பது கடினமாக இருக்கும்.

இதற்குப் பெயர்தான் ''நிரந்தர ஞாபகம்''

தற்காலிக ஞாபகம் ஒரு மின்னல் மாதிரி தோன்றி மறையும். நிரந்தர ஞாபகம் ஒரு படிவம் போல மூளையிலே படிந்து விடும்.

ஒரே சம்பவத்தின் பல பிரதிகள் மூளையிலே பல்வேறு பகுதிகளிலேயும் படிவதனாலேயே... ஒன்று மறைந்தாலும் இன்னொன்று மறைவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான் ''தொண்டையிலே இருக்கிறது... வாய்க்கு வரமாட்டேன் என்கிறது'' என்று கூறுவார்கள்.

ஒருவருக்கு எந்தத் துறையில் ஆர்வமும் ஈடுபாடும் அதிகமாக இருக்கிறதோ அதில் ஞாபகசக்தி அதிகமாக இருக்கும். தொலைபேசி நிலையத்தில் வேலை செய்பவருக்கு இலக்கங்கள் எல்லாம் நல்ல ஞாபகமாக இருக்கும்.

அதுமாதிரி கவிஞர்களுக்கு வார்த்தைகள் நல்ல ஞாபகமாக இருக்கும்.

ஒரு மூளை... எண்களை விட, எழுத்துக்களை விட படங்களை மிகவும் சுலபமாக ஞாபகத்தில் வைத்திருக்கும். உதாரணமாக, ஒரு பையனுக்கு படித்தது எதுவும் ஞாபகத்திலே இல்லையென்றால், அவன் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று அர்த்தம். மூளையைத் பொறுத்த வரைக்கும் ஞாபகசக்தி அதிகம் உள்ள மூளை; மறதியுள்ள மூளை அப்படியென்று ஒன்றும் கிடையாது. நினைவு வைத்துக் கொள்வதற்கு பயிற்சியளிக்கப்பட்ட மூளை, பயிற்சி அற்ற மூளை என்று சொல்லலாமா?

அதனாலே ஞாபக சக்தி என்பது நம்மிடம் இருக்கிற ஒருவகைப் பயிற்சி– எமது முயற்சியைப் பொறுத்துத் தான் அமையும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இந்தியாவின் கடல் எல்லையில் 45 நாட்களுக்கு மீன்பிடிக்கத் தடை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பரப்பில் நேற்று முன்தினம் முதல் பூரணை நிலவுவதற்கான வாய்ப்பு உருவாகியிருக்கிறது. தமிழ்நாட்டு மீனவர்கள் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிமுதல் மே மாதம் 31ஆம் திகதிவரை மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது என்று இந்திய மத்திய அரசாங்கம் விடுத்துள்ள தடை உத்தரவை அடுத்து இந்த நிலை உருவாகியிருக்கிறது.

மீன்கள் உட்பட கடல்வாழ் உயிரினங்கள் முட்டையிட்டு இனவிருத்தி செய்வதற்கான காலம் ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் என்பதால் இக்காலப்பகுதியில் 45 நாட்களுக்கு மீன்பிடிக்கக்கூடாது என ஒவ்வொரு ஆண்டும் இந்திய அரசினால் அறிவிக்கப்படுகிறது. அந்தவகையில் இம்முறையும் இந்த 45 நாட்கள் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையுத்தரவினால் தமிழ்நாட்டைச்சேர்ந்த 85 ஆயிரம் மீனவர்களுக்கு கடற்றொழிலில் ஈடுபடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. கரையோரப் பிரதேசங்களான பர்காஷம், கிருஸ்ணா மற்றும் குன்னூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு இந்தத் தடையுத்தரவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் கரையோரத்தில் இருந்து தூண்டில் போட்டு மீன்பிடித்தல், சிறுவலைகளை வீசி மீன்பிடித்தல் ஆகிய மீன்பிடி நடவடிக்கைகளுக்கு மாத்திரம் இந்தத் தடையுத்தரவில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிலை சுமார் 23 ஆயிரம் கடற்றொழிலாளர்கள் செய்து வருகிறார்கள். மீன்பிடி தடையுத்தரவினால் பாதிக்கப்படும் கடற்றொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டு மாநில அரசாங்கம் 31 கிலோ அரிசியையும் தலா 600 ரூபாவை வழங்குகிறது.

இந்தத்தடையுத்தரவை மீறி கடலுக்குச் சென்று மீன்பிடிப்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்களின் படகுகளும் பறிமுதல்செய்யப்படும் என்று மாநில அரசாங்கம் எச்சரிக்கை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மீன்பிடிப்படகுகள், இழுவைப்படகுகள் ஆகியவற்றில் 85 சதவீதமானவை தமிழ்நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளான ஜெயலலிதாவின் கட்சித் தொண்டர்களுக்கும் கலைஞர் கருணாநிதியின் கட்சித் தொண்டர்களுக்கும் இவ்விரு கட்சிகளின் தலைவர்களுக்கும் சொந்தமானவை.

இந்த மீன்பிடிப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளில் பணிபுரிவோருக்கு நாளாந்தம் சொற்ப தொகையே வேதனமாக கொடுக்கப்படுகிறது.

இந்த 45நாட்கள் மீன்பிடி உத்தரவினால் அடுத்த 45 நாட்களுக்கு இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் அத்து மீறி மீன்பிடிப்பதோ இலங்கைக் கடற்படையினர் தங்களை அடித்து துன்புறுத்துகிறார்கள் என்று குற்றச்சாட்டுக்களை எழுப்புவதற்கோ சந்தர்ப்பம் எற்படாது என குறிப்பிடப்படுகிறது. (அ)

# ஒருங்கிணைப்புக் குழுகூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்கான பிரதேசமட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 |
| தக்காளி | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 150 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 130 | 140 | 80-160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 70 | 60 |
| லீக்ஸ் | -- | 150 | 160 |
| பீற்றூட் | 30 | 30 | 60 |
| கறிமிளகாய் | 90 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 400 |
| போஞ்சி | -- | 80 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20-30 | 20 |
| தேசிக்காய் | 120 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 |

# இராசி பலன்

*17.04.2013*
*(சித்திரை 4, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*சப்தமி பின்னிரவு 2.56 மணிவரை*
*திருவாதிரை முற்பகல் 11.02 மணிவரை*
*இராகுகாலம் 12.04-1.34 மணிவரை*
*சுபநேரம் 4.34-6.04 மணிவரை*

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், தொழில் வளர்ச்சி அதிகரிக்க தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வருவர், இனிய சம்பவங்கள் ஏற்படலாம், போசன சுகம்.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,

**மிதுனம்** நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

**சிங்கம்** உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்தியினை கேட்கலாம், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழும் நாள்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி வகை செய்து கொள்வீர்கள், பிறர் உதவியுண்டு, வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், உற்சாகமான நாள்.

**துலாம்** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும்.

**விருச்சிகம்** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது, செலவுகள் அதிகரிக்கும், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், கௌரவ குறைவாக சிலர் நடந்து கொள்வர்.

**தனுசு** அன்பு நண்பர்கள் ஆதரவு பெருகும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் சுமுகமாக முடியும், உங்கள் கருத்துக்கு மதிப்பு கிடைக்கும்.

**மகரம்** நாவன்மையால் நற்பெயர் எடுப்பீர்கள், கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தொல்லை தந்தவர்கள் விலகுவர், தேவைகள் பூர்த்தியாகும் நாள், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புதிய முதலீடுகள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** வளர்ச்சி பாதைக்கு உதவியவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவனை காணவில்லை

(கரவெட்டி)


பருத்தித்துறை வேலாயுத மகாவித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி கற்று வரும் மாணவன் ஒருவன் கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று பிற்பகல் 2.30 மணியளவில் வீட்டை விட்டு துவிச்சக்கர வண்டியில் வர்த்தனை பகுதிக்கு கிரிக்கெட் விளையாடச் சென்றதாகவும் பின்னர் மாலை 6 மணியளவில் காணாமல் போன மாணவனின் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்ததையடுத்தே அம்மாணவன் மைதானத்தை விட்டு வெளியேறிச் சென்றதாக அவருடன் விளையாடிய இளைஞர்களால் பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் பருத்தித்துறை புலோலி மேற்கைச் சேர்ந்த துரைசிங்கம் சஜீதரன் (வயது 19) என்ற மாணவரே காணாமல் போனவர் ஆவார்.

இவர் காணாமல் போன சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (அ-3-24)




## மயான பராமரிப்பு சபை நிர்வாக தெரிவு

(கரணவாய்)

வல்வை. பொது மயான பராமரிப்புச் சபை கூட்டம் கரவெட்டிப் பிரதேச செயலர் சிவஸ்ரீ தலைமையில் நேற்று உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக கோ.குணசிங்கம், செயலாளராக சி.பூபாலசிங்கம், பொருளாளராக ந.தவராஜா, உப தலைவராக சி.நவரத்தினம், உப செயலாளராக ம.சிவநேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலைய த்திற்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் 2 உறுப்பினர் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் முதலாவது வேலைத்திட்டங்களாக எல்லைப்படுத்தல், பதிவு செய்தல், பெயர்ப் பலகை நடுதல் போன்றன நடைபெறுவதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.(அ-3-60)

## மீற்றர் வட்டிக்கு பணம் வழங்கும் நடவடிக்கைகள் அதிகரிப்பு

(கரணவாய்)


கெருடாவில் பகுதியில் மீற்றர் வட்டி மோசடிகள் அதிகரித்து வருவதால் பலர் உளவியல் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி திணறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலைகளிலும் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுக்கும் நடவடிக்கைகளும் தொடர்ந்து வருவதாகவும் இவ்வாறு பணம் பெற்றவர்களில் பெரும்பாலோனோர் குறித்த பணத்தை வட்டியுடன் செலுத்த முடியாத நிலையில் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக மேற்படி வட்டிக்கு பணம் வழங்குபவர்களும் பணம் பெறுபவர்களும் மன உளைச்சலுக்கும் உளப்பாதிப்புகளுக்கும் உள்ளாவதுடன் இதன் காரணமாக இவர்களின் குடும்பங்களும் பெறும் இன்னல்களை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

எனவே, இது சம்பந்தமாக கிராம சேவகர்கள், பிரதேச பொலிஸார், சமூக சேவகர்கள் ஆகியோர் விரைந்து நடவடிக்கை எடுத்து இவ்விடயம் குறித்த அறிவுரைகளை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, அண்மைய பொருளாதார நெருக்கடிகள், விலையேற்றம் காரணமாக அண்மைக்காலமாக பல்வேறு பிரதேசங்களிலும் இவ்வாறான துரதிர்ஷ்ட நிலைமை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-3-5-60)




## விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி தென்.மேற்கு கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஆர்.மோகனதாஸ், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் ஆகியோரும் கௌரவிருந்தினர்களாக மக்கள் வங்கி. சங்கானை கிளை முகாமையாளர் தி.சிவகுமாரன், தேசிய சேமிப்பு வங்கி சங்கானை கிளை முகாமையாளர் தி.மருதராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(அ-3-30)

## கடன் வழங்கல் படிவம் விநியோகிக்கப்படுகிறது

(நல்லூர்)

அச்சுவேலி இலங்கை வங்கி சிறுபோக செய்கை விவசாயிகளுக்கு விவசாய கடன் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே விவசாயச் செய்கைக்கான கடன் பெற்று இதுவரைக்கும் விவசாயக் கடனை மீளச் செலுத்தாதவர்களுக்கு இவ்விவசாயக்கடன்வழங்கப்படமாட்டாது.

விவசாயக் கடனைச் செலுத்தியவர்களுக்கே மீண்டும் கடன் வழங்கப்படும். இவ் விண்ணப்பப் படிவங்கள் விவசாய சம்மேளத்தின் சிபார்சுடன் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-3-134)

# கொள்ளையர்களை ஏமாற்றும் சங்கிலிகள்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணத்தில் தங்க நகைகளென நினைத்து கொள்ளையிடும் அநேக வழிப் பறிக்காரர்கள் ஏமாற்றமடையும் சுவாரஸ்ய சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன.

அண்மையில் சாவகச்சேரி டச்சு வீதியில் நடந்து வந்த பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து குறித்த பெண் கள்ளன் என கூக்குரல் இட்டு விட்டு பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு களவு போன சங்கிலியை பொருட்படுத்தாது நடந்து சென்றார்.

ஏனெனில் அவர் முலாமிடப்பட்ட சங்கிலியையே அணிந்து வந்துள்ளார். இதனால் பல முயற்சி எடுத்து குறித்த பெண்ணின் சங்கிலியை அறுத்து சென்ற திருடர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தற்போது இந்தியாவில் இருந்து பெறப்படும் தங்க நகைகள் போன்ற போலியான நகைகளையே தமது பாதுகாப்பு கருதி பெரும்பாலான பெண்கள் அணிந்து செல்வதனாலேயே பெரும்பாலான கொள்ளையர்களும் வழிப்பறிக்காரர்களும் ஏமாற்றம் அடைந்து வரும் சுவாரஸ்ய சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. (அ-3-29)

# கூரையின்றி காணப்படும் தனியார் பேருந்து தரிப்பிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை முத்த வெளிப் பகுதியில் அமைந்துள்ள தனியார் பேருந்து தரிப்பிடத்திலுள்ள பயணிகள் பேருந்து நிலையத்தின் மேற்கூரைகளின் ஒரு பகுதி இல்லாமையினால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணத்திலிருந்து பிற மாவட்டகளுக்கு செல்லும் பயணிகளுக்காக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தின் கூரைகளின் ஒரு பகுதியே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

இதனால் பயணிகள் வெயில், மழை காலங்களில் நிலையத்தினுள் இருக்க முடியாத நிலைக்குட்பட்டுள்ளனர்.

ஆரம்பத்திலிருந்த இக்கூரைகள் திருடர்களால் திருடப்பட்டிருக்கலாம் அல்லது காற்றினால் தூக்கி வீசப்பட்டிருக்கலாம் என பயணிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேருந்து நிலையத்தின் கூரைகளை போடுவதற்கான நடவடிக்கையினை வேகமாக மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-15)





சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிகாரிகளுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட [illegible] உதவி ஆணையாளர் கே.மகேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தீயம் இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் வெளியிடப்படும் காந்தீயம் சஞ்சிகையின் ஏப்ரல், மே மாதத்திற்கான இதழ் வெளிவந்துள்ளது.

இவ் இதழின் பிரதியொன்றை இலவசமாக பெற விரும்புவோர் 5 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர் காந்தீயம், காந்தி நிலையம், 8 ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் இலவச பிரதியை பெற்றுக் கொள்ள முடியுமென காந்தீயம் இதழாசிரியர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி தெரிவித்துள்ளார். (அ-5)

## கோப்பாய் பகுதியில் பாதீனிய செடிகள்

விவசாயப் பயிர்ச் செய்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பாதீனியச் செடிகளின் அதீத பெருக்கத்தினால் அவற்றை கட்டுப்படுத்த முடியாத நிலையில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கோப்பாய் பிரதேசத்தில் இராசவீதி, செம்மண் தோட்டப் பிரதேசங்கள், கரந்தன், நீர்வேலி, புத்தூர், நிலாவரை போன்ற பகுதிகளிலேயே மேற்படி பாதீனியக்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இச் செடிகள் அப்பகுதி விவசாயிகளாலும் பொதுமக்களாலும் கடந்த காலங்களில் முற்றாக அழிக்கப்பட்ட போதும் மீண்டும் இச்செடிகள் அதிகரித்து வளர்வதனால் பொதுமக்களும் விவசாயிகளும் தொடர்ந்து இன்னல் அடைந்து வருகின்றனர். (அ-3-5-134)

# இலங்கையில் மிகப் பெரும் வரிமோசடி குற்றவாளிகளுக்கு சிறை தண்டனை

## அபராதம் விதிப்பு, சொத்துக்களும் அரசுடைமை

(கொழும்பு)

தெற்காசியாவின் பெரிய வற்வரி மோசடியாகக் கருதப்படும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் நடைபெற்ற 357 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி மோசடி உள்ளிட்ட குற்றங்களை ஒப்புக் கொண்ட மூவருக்கு 10 கோடியே 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதமும் 33 மாத கடூழிய சிறைத் தண் டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் குமுதினி விக்ரமசிங்க இந்தத் தண்டனையை விதித்தார். மூவரும் அபராதப் பணத்தை செலுத்தவில்லையானால் தற்போது அரசின் பொறுப்பிலுள்ள அவர்களின் சகல ஆதனங்களையும் அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

வற்வரி மோசடி வழக்கில் 10, 13,14 ஆம் ஆகிய குற்றம் சுமத்தப்பட்ட சின்னையா சுப்பிரமணியம், முஹமட் ரிஸ்மி, சஹாப்தீன் அப்துல்லா ஆகியோருக்கே இவ்வாறு அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த மோசடியால் தேசிய பொருளாதாரத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசுக்கு சேர வேண்டிய நிதி போலி வழி மூலம் அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. எனவே, இவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்கி அந்தப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு வழக்கின் முறைப்பாட்டை நெறிப்படுத்திய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் புவனெக அலுவிகாரே நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டார்.

இக்காரணங்களை பரிசீலித்த நீதிபதி குற்றம் சுமத்தப்பட்ட மூவரும் ஏழு ஆண்டுகளாக தடுப்புக்காவலில் இடப்பட்டு குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு நீதிமன்றத்தில் இவ்வாறான இலகு தண்டனை வழங்க நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்தார்.

2002, 2004 ஆம் ஆண்டுகளில் அரசுக்கு வரவேண்டிய 357 கோடி ரூபாவை ஆடை ஏற்றுமதி நிறுவனமாக பதிவு செய்து போலி நிறுவனத்தின் பெயரால் பணத்தை விடுவித்தமை, அப்பணத்தை முறையற்ற விதத்தில் பாவித்தமை உட்பட பல குற்றங்கள் தொடர்பாக சட்டமா அதிபர் குற்றப் பத்திரம் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கின் முடிவில் 10 ஆவது எதிரிக்கு 13 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் 10 கோடி ரூபா அபராதமும் 13 ஆவது எதிரிக்கு ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும் 10 இலட்சம் ரூபா அபராதமும் 14 ஆவது எதிரிக்கு 8 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் 50 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

ஊடகங்களில் இந்த மோசடி பற்றி செய்தி வெளியானதும் குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸ் இன்ஸ்பெக்டர் பீ. விஸ்வநாதன் உட்பட பொலிஸ் அதிகாரிகளின் குழு பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி வரி ஆணையாளர், உதவி வரி ஆணையாளர் ஆகியோர் கைதாகினர். குற்றம் சுமத்தப்பட்டோர் நாட்டை விட்டு செல்வதற்கு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டது. இருந்தும் குற்றம் சுமத்தப்பட்ட பலர் வெளிநாடு சென்றிருந்தனர்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் இறைவரி ஆணையாளர் ஆனந்த அம்பேபிட்டிய உதவி ஆணையாளர் ஞானசிரித சொய்ஸா உட்பட 14 பேர் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

குற்றம் சுமத்தப்பட்ட 8 பேரில் ஆறு பேருக்கு எதிராக மட்டும் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துச் கொள்ளப்பட்டது.

போலி ஆவணங்களைத் தயாரித்து 20 போலி நிறுவனங்களின் பெயரில் 235 காசோலைகள் மூலம் இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வழக்கில் முதலாம் இரண்டாம் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவ டிக்கை தொடர்பாக பரிசீலிப்பதை நீதிபதி இம் மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (அ)

# இந்திய பணியாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டாம்

## முதலீட்டு சபைக்கு அரசு உத்தரவு

(கொழும்பு)

முதலீட்டுத் திட்டங்களில் இந்தியப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கம் இலங்கை முதலீட்டுச் சபைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை அரசின் புதிய கொள்கைத் திட்டத்தின் படியே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள அவர், கட்டுமானத் திட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள இந்தியப் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்களுக்குப் பதிலாக உள்நாட்டில் பயிற்சிபெற்ற பணியாளர்களை அரசாங்கம் பணியில் ஈடுபடுத்தவுள்ளது.

அரசாங்கத்தின் புதிய கொள்கைப் பிரகடனத்தின் படியே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கட்டுமானத் திட்டங்களில் இந்தியப் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அடுத்துவரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் இந்தியப் பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது கணிசமாகக் குறைக்கப்படும். கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தில் சுமார் 800 பயிற்றப்பட்ட இந்தியப் பணியாளர்களும் உருக்கு தொழிற்சாலைகளில் 1500 இற்கும் அதிகமான இந்தியப் பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். இவர்களுக்குப் பதிலாக உள்நாட்டில் பயிற்சி பெற்றவர்கள் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

முதலீட்டுத் திட்டங்களுக்கு இந்தியப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்துவதை குறைக்கும்படி இலங்கை முதலீட்டுச் சபைக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

# எனக்கும் பிரதமராகும் தகுதியுண்டு என்னையும் கவனத்திலெடுங்கள்

## சுஷ்மா சுவராஜ் ஆதங்கம்

(சென்னை)

பாரதிய ஜனதாக் கட்சியில் மோடியை போன்று அத்வானிக்கும் பிரதமர் வேட்பாளருக்கான ஆதரவு பெருகி வருகின்ற வேளையில் தானும் பிரதமர் வேட்பாளருக்கு தகுதியானவரே என சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை பிரதமர் வேட்பாளராக முன் நிறுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த நிலையில் அவருக்கு கட்சியின் உயர் மட்டக் குழுவில் முக்கிய பொறுப்பும் வழங்கப்பட்டது.

இருப்பினும் பா.ஜ.கட்சிக்கு தலைமை வகிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐக்கிய ஜனதாத் தளம் கட்சிக்கு மோடியை பிரதமராக முன் நிறுத்துவதற்கு பிடிக்கவில்லை.

இந்த நிலையிலேயே பா.ஜ.கட்சியின் மூத்த தலைவர் அத்வானியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்கின்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. இதனால் பா.ஜ.கட்சிக்குள் மோதல் வலுக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த மோதல் மேலும் வலுப்பெறும் விதமாக சுஷ்மா சுவராஜ் மேற்கண்டவாறு கூறியுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 26.25<br>தகைமை/தொழில்: B.F.A,M.F.A விரிவுரையாளர்<br>எ.பார்.:சைவ போசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B -1635 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 43, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L Computer, NCTA<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G -1645 |
| பிறப்பு: 1978 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 6'<br>கி.பா: 61.25, 1 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L, அலுமினிய பிற்றிங்<br>தொ.இ: B -1636 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:அச்சுவினி 3<br>உயரம்: 5'4"<br>கி.பா: 26.25<br>தகைமை/ தொழில்: BA பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: G-1646 |
| பிறப்பு: 1983 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: விசாகம் 3, 12 இல் செவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/ தொழில்: Library Assistant<br>தொ.இ: B -1637 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 38.25, 1இல் சூரி, செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1647 |
| பிறப்பு: 1980 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 6'<br>கி.பா: 33.5<br>தகைமை/தொழில்: A/L வெளிநாடு (கட்டார்)<br>எ.பா: வெளிமாவட்டமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B -1641 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3, 8இல் சூரி, செவ்<br>உயரம்:165 cm<br>தகைமை/ தொழில்: A/L, NGO<br>தொ.இ: G -1648 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மட்டும் சிறுபான்மையினர் அதிருப்தி கொண்டிருக்கவில்லை

## ஏனைய நாடுகளிலும் இந்நிலையே-கோத்தா

(கொழும்பு)

**உலகம் முழுவதிலும் கைது செய்யப்பட்டவர்களை இரகசியத்தடுப்பு முகாம்களில் வைத்திருக்கும் அமெரிக்கா பொறுப்புக்கூறும் விவகாரம் குறித்து இலங்கையிடம் எவ்வாறு கேள்வி எழுப்ப முடியும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வினவியுள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

மேலும் இராணுத்தினரிடம் சரணடைந்த வர்கள்ள மட்டும் இலங்கை அரசாங்கம் புனர்வாழ்வளித்து விடுதலை செய்யவில்லை. தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களையும் விடு வித்துள்ளது.

உலகம் முழுவதிலும் மேற்கொண்ட நட வடிக்கைகளின் மூலம் கைது செய்யப்பட்ட வர்களை இரகசிய தடுப்பு நிலையங்கள் உள் ளிட்ட சிறைகளில் வைத்துள்ள அமெரிக்கா பொறுப்புக்கூறல் குறித்து எம்மிடம் எப்படிக் கேள்வி எழுப்ப முடியும்.

தீவிரவாதத்துக்கு எதிரான அமெரிக்கா வின் போரின் போது ஆட்கடத்தல்கள் மேற் கொள்ளப்பட்டன.

அல்கொய்தா செயற்பாட்டாளர் ஒருவரை கைது செய்து அமெரிக்காவின் மத்திய புல னாய்வு முகவரகத்திடம் ஒப்படைத்ததாக இல ங்கை அரசாங்கம் மீதும் குற்றச்சாட்டு உள்ளது.

செம்டெம்பர் 11 தாக்குதலின் விளைவாக அமெரிக்கா முஸ்லிம்களை மட்டும் இலக்கு வைக்கவில்லை.

அந்தக் தாக்குதலின் பின்னர் அமெரிக்கா வில் கல்வி கற்ற எனது மகன்கூட சிக்கல் களை எதிர்கொள்ள நேரிட்டது.

உலகிலேயே இலங்கையில்தான் சிறு பான்மையினர் அதிருப்தியை உணர்கிறார் கள் என்றில்லை. ஏனைய நாடுகளிலும் கூட அந்த நிலை உள்ளது.

எல்லா சமூகங்களும் சமமானவை. பல் கலைக்கழக அனுமதிகள் இனரீதியாக இடம் பெறுவதாக சிலர் கூறுகின்ற போதிலும் அவை கண்டிப்பாக திறமை அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை அரசாங்கம் எந்தவொரு சமூ கத்துக்கும் பாரபட்சம் காட்டாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# நீரில் மூழ்கி இளைஞன் பலி

(கொழும்பு)

மகாவலி ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில் காணாமல் போயுள்ளார்.

கொழும்பு தெமட்டகொட பகுதியைச் சேர் ந்த 23 வயதான இளைஞரே இவ்வாறு காணாமற் போனவராவார்.

நேற்று முன்தினம் திங்களன்று இடம் பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மலையகப் பகுதிக்கு சுற்றுலா வந்த இளை ஞர்கள் சிலர் கினிகத்தேனை அம்பகமுவை பிரதேசத்தில் கண்டிவீதியில் அமைந்துள்ள மகாவலி ஆற்றில் நீராடியுள்ளனர்.

இதன்போதே மேற்படி இளைஞர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக கினிகத் தேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இளைஞரை தேடும் பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-5)

# அமெரிக்காவின் நிதிக்குறைப்பு குறித்து சிந்திக்கவேண்டும்

## ஹர்ச டி சில்வா எம்.பி. தெரிவிப்பு

இலங்கைக்கான நிதியுதவியைக் குறைக் கும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெர்ரியின் தீர்மானம் துரதிர்ஷ்டவசமானது என இலங்கையின் பொருளாதார நிபுணரும் ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

வெட்டப்படவுள்ள நிதியுதவித் தொகை பெரியளவிலானது அல்ல என்பதால் இது ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல என்று இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது. ஆனால் இது பெரிய தொகையா சிறிய தொகையா என்ற விவகாரம் அல்ல. இது சிந்திக்க வேண் டிய விவகாரம்.

விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க உத விய நாடு என்ற வகையில் இலங்கையைப் பொறுத்தவரை அமெரிக்கா ஒரு முக்கியமான நாடு. விடுதலைப்புலிகளைத் தடை செய்ததன் மூலம் அவர்களின் அனைத்துலகநிதி வலைய மைப்பை அமெரிக்கா வரண்டு போகச் செய் தது. அவர்கள் தமது இராணுவப்புலனாய்வுத் தகவல்களை எம்முடன் பகிர்ந்து கொண்ட னர். அதுபோரில் நாம் வெற்றி பெறுவதற்கு உத வியது. இலங்கையின் மிக முக்கியமான வர்த் தகப் பங்காளியாகவும் அமெரிக்கா உள்ளது.

இலங்கையின் ஆடை உற்பத்தியில் 40 சதவீதத்தை அந்தநாடுதான் கொள்வனவு செய்கிறது. நாம் அமெரிக்காவை இலங்கை யின் நண்பனாகப் பார்க்கவேண்டும்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மென்பானங்களில் இருந்து ஐபோன், ஐபாட் வரை இலங்கையில் பெரியளவில் அமெ ரிக்காவின் தலையீடு உள்ளது. இருநாடுகளுக் கும் இடையில் உறவுப்பாலத்தைக் கட்டியெழு ப்ப வேண்டியது அவசியமான தேவையாகும்.

அமெரிக்காவுடன் இலங்கை ஒத்திசை வான வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப் பிடிக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத் தியுள்ளார். (அ)

# இலவச நாடக பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(காரைநகர்)

காரைநகர் கிழவன் காடு கலாமன்றத் தினரால் இலவச நாடகப் பயிற்சிக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள ஆர்வமுடைய கலைஞர்கள் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் விண்ணப் பப்படிவங்களை கலாமன்றத்தில் பெற்று பதி வாளரிடம் நேரடியாகவோ அல்லது தலைவர், கிழவன் காடு கலாமன்ற முகவரிக்கோ அனு ப்பி வைக்கலாம். அத்துடன் விண்ணப்பதாரி கள் காரை நகரை வசிப்பிடமாக கொண்டவராக வும் 18-45 வயதுக்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். (அ)

# அமெரிக்காவின் நடவடிக்கையில் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாது

## ஜனாதிபதியின் பேச்சாளர்

அமெரிக்காவின் 20 சதவீத நிதியுதவிக் குறைப்பு இலங்கையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்று ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்காவின் நிதியுத வியை 20 சதவீதத்தினால் குறைப்பதற்கு அமெரிக்க காங்கிரசுக்கு இராஜாங்கச் செயலர் ஜோன் கெர்ரி பரிந்துரை செய்துள்ளது குறி த்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ் வாறு கூறியுள்ளார்.

ஜப்பான் போன்று இலங்கைக்கு கொடை வழங்கும் முக்கிய நாடாக அமெரிக்கா இல்லை. அமெரிக்காவிடம் இருந்து எமக்கு குறிப்பிடத் தக்களவு நிதியுதவி கிடைப்பதில்லை.

எனவே அதன் 20 சதவீத நிதியுதவிக் குறைப்பு இலங்கைக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்று நினைக்கிறேன். இந்த விவகாரம் குறித்து நாம் பேச வேண்டிய தேவையுள்ளது.

எனினும் பல்வேறு நாடுகளுக்கான நிதி யுதவிகளை அமெரிக்கா குறைப்பது இதுதான் முதல் தடவையல்ல. இதுபோன்று முன்ன ரும் பலமுறை நடந்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

# கிணற்றில் இருந்து சடலம் மீட்பு

வயோதிபப் பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது. நீர்வேலி மேற்கு மாசிவன் மீனாட்சி அம்மன் கோவில் வீதியிலுள்ள வீட்டுக் கிணற்றிலிருந்தே வயோதிபர் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கனகம்மா (வயது-73) என்பராவார். இவரது மரணம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமாரும் விசார ணைகளை மேற்கொண்டிருந்தனர். கோவிலுக்கு செல்வதற்காக அதிகாலை வேளை குளிக்கச் சென்றபோது கிணற்றுக்குள் தவறி விழுந்து குறித்த வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார் என விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. (அ-6)


# ஆமைகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது

தேசிய ரீதியில் பாதுகாக்கப்பட வேண்டிய ஆமைகளின் எண்ணிக்கை குறைந்து வருவ தாக சுற்றாடலை பாதுகாப்பதில் ஆர்வமுள்ள அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

சீனர்கள் ஆமை இறைச்சியை விரும்பி உண்பதால் அவர்களின் விருப்பத்தை ஈடு செய்வதற்காக நாடெங்கிலும் உள்ள உயர் மட்ட உணவகங்களில் ஆமை இறைச்சி இரக சியமாக சமைத்து சீனர்களுக்கு அதிக விலை க்கு பரிமாறப்படுவதாக பொலிஸாருக்கு முறை ப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஆமைகள் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள நீர்த் தேக்கங்களில் நூற்றுக் கணக் கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இவை இய ற்கையான சூழலுக்கு மெருகூட்டுவதாக இருக்கின்றன. சமீபத்தில் பொலிஸார் சீனப் பிரஜைகள் மறைத்து வைத்திருந்த பல ஆமை களை கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவர்களில் [illegible] வதற்காக அவ[illegible] கள் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (அ)




யாழ். அத்தியடி பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது சுவாமி வீதியுலா வருவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படம் எடுக்க வேண்டிவரும் என்பதால் இலங்கை ஜனாதிபதியின் சந்திப்பை தவிர்த்தோம்!- இந்திய எம்.பி

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதியை சந்தித்தால் அவருடன் புகைப்படம் எடுக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் அது இந்தியாவிலுள்ள தமிழ் மக்களின் மனதை புண்படுத்தும் எனும் காரணத்தாலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பில் ஆர்வம் காட்டவில்லை என்றும் இலங்கை சென்ற இந்திய நாடாளுமன்ற குழுவின் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

மேலோட்டமாக பார்ப்பதற்கு அமைதியும் நிம்மதியும் நிலவுவது போலத் தோன்றினாலும் இலங்கையின் வடபகுதியில் உள்ள மக்களிடையே கடும் கோபமும் குறைகளும் உள்ளன என்று அங்கு அண்மையில் சென்று திரும்பிய இந்திய நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினரான சவுக்கத் ராய் தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் போருக்கு பின்னர் வட மாகாணத்தில் சிறிதளவு அமைதி திரும்பியிருந்தாலும் அங்குள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் மனதில் நிறை குறைகள் இருக்கின்றன என்று அக்குழுவின் ஒரு உறுப்பினரான சௌகத் ராய் சுட்டிக்காட்டியுள்ளதோடு போர் முடிந்த பின்னர் குறைகளை தீர்த்து தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கும் நடவடிக்கையில் பெரிய முன்னேற்றம் ஏதும் இல்லை என்றும் 13 ஆவது சட்ட திருத்தத்திலுள்ள அம்சங்களை நடைமுறைப்படுத்துவது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது ஆகியவை தொடர்பிலும் முன்னேற்றம் இல்லை என்றும் தமிழ் மக்கள் தம்மிடம் தெரிவித்ததாக அவர் கூறினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் ஒரு கால அட்டவணையும் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனக்கூறிய அவர் அது மக்கள் மனதில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கையின் முதல்படியாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் தாங்கள் கண்டது, கேட்டது பற்றி இந்திய அரசிடமும் நாடாளுமன்றத்திலும் பேசப்படும் என தெரிவித்துள்ள அவர் இலங்கை அரசு இனப்பிரச்சினைகான தீர்வைக் காணும் எனும் நம்பிக்கை தனக்கு இல்லை. இலங்கை ஜனாதிபதியை சந்தித்தால் அவருடன் புகைப்படம் எடுக்க வேண்டிய சூழல் ஏற்படும். இது இந்தியாவிலுள்ள தமிழ் மக்களின் மனதை புண்படுத்தும் எனும் காரணத்தாலேயே ஜனாதிபதியைச் சந்திப்பதில் இந்தக்குழு ஆர்வம் காட்டவில்லை என்றும் சவுகத் ராய் கூறியுள்ளார். இறுதிக்கட்ட போரின் போது நடந்ததாகக் கூறும் மனிதவுரிமைகள் மீறல்கள் தொடர்பான விடயங்கள் ஐ.நா. மனிதவுரிமைகள் குழுவில் விவாதிக்கப்பட்டுள்ள நிலையில் அது குறித்த தமது குழு அதிகம் பேசவில்லை என மேலும் கூறினார். (அ)

## துவிச்சக்கரவண்டி தரிப்பதற்கு கொட்டகை அமைக்கப்படவில்லை

(மல்லாவி)

கிளிநொச்சி பிரதேசசபையின் கீழ் உள்ள கிளிநொச்சி மாவட்ட பொதுச்சந்தையினுள் இயங்குகின்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தினுள் கொட்டகைகள் வசதியின்மையால் மழையிலும் வெயிலிலும் நனைந்தும் காய்ந்தும் துவிச்சக்கரவண்டிகளும் மோட்டார்சைக்கிள்களும் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இதில் துவிச்சக்கரவண்டி ஒன்றுக்கு 5 ரூபாய் கட்டணமும் மோட்டார்சைக்கிளுக்கு 10 ரூபாய் கட்டணமும் அறவிடுகின்ற போதும் துவிச்சக்கரவண்டிகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு கொட்டகைகள் கிளிநொச்சி பிரதேச சபையினர் அமைத்துத்தரவில்லை என குற்றம் சாட்டப்படுகிறது. கொளுத்தும் வெயிலில் துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தப்படுவதால் துவிச்சக்கரவண்டிகள் காற்றுப்போகும் நிலைமையும் காணப்படுகிறது.

எனவே இதனை பிரதேச சபையினர் எடுத்து துவிச்சக்கரவண்டி பாதுகாப்புக்கென கொட்டகை ஒன்றை அமைத்துத்தர வேண்டும் எனக் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-15)

## அரசுடன் பேச்சு நடத்தி சுமுகமான உறவை பேணுக!

### ஐ.தே.கட்சி ஆலோசனை

சாரத்தை வரிந்து கட்டிக் கொண்டு சண்டித்தனம் காட்டாது அமெரிக்காவுடன் சுமுகமாகப் பேச்சு நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண மஹிந்த அரசு முன்வரவேண்டும். இல்லையேல் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான நிதியுதவியில் 20 சதவீதத்தைக் குறைப்பதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறும் போது. இராஜதந்திர மட்டத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணுமாறு நாம் மஹிந்த அரசிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் அரச தரப்பினர் சண்டித்தனம் காட்டுகின்றனர். உலக நாடுகளுடன் சண்டை பிடிப்பதல்ல வெளிவிவகார அமைச்சின் நோக்கம்.

எனவே சாரத்தை வரிந்து கட்டிக்கொண்டு சண்டித்தனம் காட்டாது அமெரிக்காவுடன் சுமுகமாகப் பேச்சு நடத்த மஹிந்த அரசு முன்வராவிடின் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கையின் பொருளாதாரம் 6.8சதவீதமாக இவ்வாண்டு உயரும்

### ஆசிய அபிவிருத்தி சஞ்சிகையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த பொருளாதார நிலைப்பாடு பற்றிய ஆசிய அபிவிருத்தி அவுட்லுக் 2013 சஞ்சிகையில் இலங்கையின் பொருளாதாரம் இவ்வாண்டில் 6.8 சதவீதமாகவும் 2014 இல் 7.2 சதவீதமாகவும் வளர்ச்சியடையும் என்ற மகிழ்ச்சிக்குரிய ஆதாரபூர்வமான தகவலை வெளியிட்டுள்ளது.

2012இல் கைத்தொழிற்றுறை இரண்டு மடங்கு வளர்ச்சியடைந்து 10.3 சதவீதமாக உயர்ந்திருந்தது. அதைவிட நிர்மாணத்துறையின் வளர்ச்சி சிறப்பாக அமைந்திருந்தது.

இலங்கையில் வறட்சி காரணமாக விவசாயத்துறை மந்தநிலையில் இருந்த போதிலும் இவ்விதம் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருப்பது பாராட்டக்கூடிய விடயமென்றும் அந்த சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் நேரடியான முதலீடு 2012 ஆம் ஆண்டில் 2011 ஆம் ஆண்டில் இருந்ததைப்போன்று ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற இலக்கில் ஸ்திரமாக இருந்து வருகின்றது.

2013 இல் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி சற்று மந்தமாக 4 சதவீதமாகவே வளர்ச்சியடைந்துள்ளபோதிலும் 2014 இல் அது 10 சதவீதமாக உயரும் என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டேன்

### மாதுலுவே தேரர் தெரிவிப்பு


(கொழும்பு)

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் எதுவும் கிடையாது என மாதுலுவே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

பொதுவான வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எவ்வித உத்தேசமும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார முறைமைஇல்லாதொழிக்க இணங்காவிட்டால் மாற்று வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்து தேர்தலில் களமிறக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மஹிந்த சிந்தனைக் கோட்பாடுகளின் மிக முக்கியமான விடயங்களில் ஒன்றான நிறைவேற்றுஅதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாரை பொது வேட்பாளராக நியமிப்பது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் மேலும் கூறினார். (அ)






சைவ வித்தியா விருத்திசங்க நிர்வாகத்தின் கீழ் இயங்கப் பெறும் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற புத்தாண்டு தின கைவிசேஷம் வழங்கும் நிகழ்வின் போது சங்கத்தின் தலைவர் வி. ஸ்ரீசந்திரவேல் சிறுவன் ஒருவரிற்கு கைவிசேஷம் வழங்குவதனையும் நிகழ்வில் கலந்துகொண்ட இல்ல மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூதாட்ட வர்த்தகர்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது
## ஐ.தே.க. குற்றச்சாட்டு

மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களை விட சூதாட்ட வர்த்தகர்களுக்கு அதிக நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இலங்கையின் பாராளுமன்ற அமர்வுகள் கடந்த வாரம் நிறைவடைந்தன.

கடந்தவாரம் மாத்திரம் நிதி தொடர்பான 15 சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டன. எனினும் அவை அனைத்தும் பொது சேவைகளான திருமண பதிவு போன்றவற்றுக்கான கட்டணங்கள் அதிகரிப்பு தொடர்பிலேயே அமைந்துள்ளது. அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கான நிவாரணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் சூதாட்டக்காரர்களின் வசதிகளை அதிகரிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டிருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார். இது பொதுமக்களின் அரசாங்கம் என்பதை விட சூதாட்டக்காரர்களின் அரசாங்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# சைவசமய அபி.கழகத்தின் திருமுறை மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்த ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளதாக சமய பிரசாரகர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

இப்போட்டி தரம் 1, 2 பாலர் பிரிவிலும் தரம் 3,4கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு மாசில் வீணையும் மாலை மதியமும், சொற்றுணை வேதியன் சோதி வானவன் ஆகிய இரு தேவாரங்களும் கீழ்ப் பிரிவிற்கு மாசில் வீணையும் மாலை மதியமும், சொற்றுணை வேதியன் சோதி வானவன், கூற்றாயினவா றுவிலக் ககலீர் ஆகிய மூன்று தேவாரங்களும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள திருமுறை மனன போட்டிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம், இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பரிசில்கள் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஓய்வு பெறும் எல்லையை அதிகரிக்க வேண்டும்
## மத்திய வங்கி பரிந்துரை

(கொழும்பு)

இலங்கையில் ஓய்வு பெறும் கால எல்லையை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மத்திய வங்கி வெளியிட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் கணிப்பீட்டின் படி பிறப்புக்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேநேரம் இறக்கும் வீதம் குறைவடைந்து காணப்படுகிறது. அத்துடன் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு செல்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் இலங்கையில் தொழில்வாய்ப்புக்களை செய்ய இளைஞர்கள் இருக்கமாட்டார்கள் என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

எனவே அரச மற்றும் தனியார் பணியாளர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய வங்கி கோரியுள்ளது. (அ)

# சிறிலங்கா எயார்லைன்ஸ் சாதனை படைத்துள்ளது

(கொழும்பு)

சிறிலங்கா எயார்லைன்ஸ் நிறுவனம் அதிக சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் மாத்திரம் சிறிலங்கா எயார் லைன்ஸ் நிறுவனம் 17 ஆயிரத்து 329 மெட்ரிக் சரக்குகளை ஏற்றி இறக்கியுள்ளது. இது சரக்கு விமானங்களின் வரலாற்றில் இலங்கையில் கையாளப்பட்ட மிக அதிக தொகை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கடந்த வருடம் ஜூன் மாதம் 16 ஆயிரத்து 312 மெட்ரிக்தொன்கள் கையாளப்பட்டிருந்தன.

கடந்த கால் நிதியாண்டில் சிறிலங்கா எயார் லைன்ஸின் சரக்கு கையாள்கைகள் 8 சதவீதத்தால் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# கடம்பு

**Botanical Name-**
**Anthocephalus Indicus**
**Family-Raubiaceae**
**Engl-Common Cadamba**

பூக்கும் இருவித்திலை தாவரம்



பருத்து, கிளைத்து உயரமாக வளரும் பெரிய மரம்.வறண்ட நிலத்திலும் 1500 அடி உயரமான மலைப்பாங்கிலும் உயர்ந்து வளரும். முட்டை வடிவமான 6 அங்குலம் அகன்ற தனியிலை. ஓர் அடி நீளமானது. இலையடிச் செதில்கள் ஈட்டி போன்றன. எளிதில் உதிர்வன.

மஞ்சரி கொத்தாக பூக்கும். கிளை நுனியில் வெள்ளிய பூங்கொத்து இரண்டு தோன்றும். மலர் மங்கிய வெள்ளை நிறமானது. ஐந்தடுக்கானது. நறுமணம் உள்ளது. புல்லி வட்டத்தில் 5 புறலிதழ்கள் உள்ளன. அடியில் இணைந்தும் அல்லி வட்டத்தில் 5 அகலிதழ்கள் இணைந்து அடியில் நீண்ட குடலுடன் புனல் வடிவாகவும், மகரந்தப் பைகள் நீள் முட்டை வடிவில் ஈட்டி போன்றும், மெல்லிய சூலகத்தண்டு மலரின் வெளியே காணப்படும்.

கனிகள் மஞ்சள் நிறமான அடித்தளத்தில் வெடி கனியாக புதைந்திருக்கும். பல விதைகளைக் கொண்டது. முளைவேர் தடித்திருக்கும்.

விதைகள் முலமாகவும், வேர்க் கன்றுகள் மூலமாகவும் இனவிருத்தி செய்யலாம்.

இதன் பரம்பல் பெரும்பாலும் இலையுதிர் காடுகளிலும், 1500 அடி உயர மலைப் பாங்கிலும் காணப்பட்ட போதும், யாழ். மாவட்டத்தில் கோலிக்கனி பயிரிடப்பட்டு வளர்க்கப்படுகின்றது.

### மருத்துவப்பயன்கள்

★கடம்பமரத்தின்இலை, விதை, பட்டை, பழம் ஆகிய அனைத்தும்மருத்துவகுணமுடையவை.

★கடம்ப மலரை நெய்யில் போட்டுக் காய்ச்சி நெய்யை உண்ண சிறுநீர் எரிச்சல் நீங்கி சிறுநீர் தாராளமாக வெளியேறும்.

★கடம்பம் இலைகள் ஒரு பங்கிற்கு 4 பங்கு நீரிலிட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி வாய் கொப்பளித்து வர தொண்டைப் புண், வாய்ப்புண் ஆகியன நீங்கும்.

★கடுமையான வேலை செய்து வயிற்று நோ கண்டால் கடம்ப சாற்றுடன் சிறிது சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம்.

★கடம்ப மரப்பட்டை 2 பங்கு, சுக்கு 2 பங்கு சேர்த்து 4 பங்கு நீரிலிட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை குடிக்க இரத்த கழிச்சல் நீங்கும்.

★கடம்ப விதைத்தூள் 1 கிராம், இஞ்சிச் சாறு 8 மில்லி கலந்து கொடுக்க ஜலதோஷம் நீங்கும். சுவாசக்குழாயிலுள்ள சளியையும் வெளியேற்றும்.

★இதன் விதைகளை நீர்விட்டரைத்து அடிவயிறு, மார்பு முதலிய இடங்களில் பற்றுப் போட வயிற்றுப் பொருமல், நெஞ்சுவலி குணமாகும்.

★இதன் விதைத்தூளை அரித்து மூக்குப் பொடியாக பயன்படுத்த தலைவலி நீங்கும்.

★கடம்பம் விதை,சாதிக்காய், மிளகு, முருங்கை விதை இலைகளை ஒரேயளவாக எடுத்து தேங்காய்ப் பால் விட்டரைத்து 130 மில்லி கிராமளவு குளிகைகளாக உருட்டி சுண்டக்காய்ச்சிய பசுவின் பாலில் கொடுக்க தாது பலம் உண்டாகும்.

★கடம்ப மரப்பட்டையை இடித்து தூள் சட்டியில் போட்டு வறுத்து துணியில் முடிந்து ஒத்தடமிட வாதத்தால் உண்டாகும் பிடிப்பு தீரும்.

★கடம்ப விதை, கரியபோளம், மாவிலங்கம் பட்டை ஒரேயளவாக எடுத்து அரைத்து கை, கால் மூட்டுக்களுக்கு பற்றிட மூட்டு வீக்கம், கீல் வாதம், பிடிப்பு நீங்கும்.

★கடம்ப விதைகளையும் கருந்துளசி இலைகளையும் ஒரே அளவாக எடுத்து 4 பங்கு நீரிலிட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 30-60 மில்லி அளவு குடிக்க கொடுக்க தலைப்பாரம், தலைவலி, தும்மல் நீங்கும்.

★விதையை அரைத்து 2 கிராம் அளவு மிளகுக் குடிநீரில் கொடுக்க நஞ்சுக்கடி நீங்கும்.

சவுரி/குறட்டை கொடிச்சாறு -500 மில்லி
முடக்கொத்தான் சாறு -250 மில்லி
கடம்பம் விதை -125 கிராம்
கழஞ்சிப் பருப்பு -32 கிராம்
எண்ணெய் (நல்லெண்ணெய்) -1 லீ

★மேற்படி எண்ணெயில் சாறுகளை கலந்து கடம்பம் விதை, கழஞ்சிப்பூடு இவற்றை பாசுவின்பாலில் விட்டரைத்து அதனுடன் கலந்து அடுப்பேற்றி சாறு சுவறி கற்கச் சரக்கு மெழுகு பதம் வந்ததும் ஆறவிட்டு வடித்து குப்பியில் அடைத்து வைத்துக் கொள்ளவும். பக்கவாதம் உள்ளவர்கள் தினமும் இரு வேளை கை, கால்களுக்கு பூசி வர குணமாகும்.


★கண்நோய் ஏற்பட்டால் இதன் பட்டைச் சாறும் எலுமிச்சப்பழச்சா றும் ஒரேயளவு கலந்து அதனுடன் சிறிது வெண்காரம் சேர்த்தரைத்து கண் ணைச்சுற்றி பூசி வர கண் எரிச்சல் நீங்கி கண்நோய் குணமாகும்.

குறிப்பு -இதில் வேரும் கரியபவளம் வெண்சாரம் என்பவற்றை தமிழ் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

★நல்லெண்ணெய்யில் கடம்பம் இலைகளை போட்டுக்காய்ச்சி தலையில் தேய்த்து 1/2 மணிநேரம் கழித்து தலைக்கு குளிக்க தலைப்பாரம் குணமாகும்.

★கடம்பம் பட்டை, கொத்தமல்லி இரண்டையும் ஒரேயளவாக எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக காய்ச்சி 30-60 மில்லி தினம் 3 வேளை எடுக்க ஆரம்ப காய்ச்சலை கட்டுப்படுத்தலாம். சிறுநீரும் நன்கு வெளியேறும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

17

மன்னர் யோசனையில் ஆழ்ந்தார். அவரது மைத்துனன் கனகராஜன் பிழையாகத் தகவலை ஒருபொழுதும் தர மாட்டான். பரவையை பலரது ஆட்சேபனைகளுடன் தான் திருமணம் செய்து வைத்தான்.

கனகராஜன் கூறினான்: "மன்னா இன்னொரு சங்கதி முக்கியமானது..."

"என்ன கனகராஜா?" "திருகோணமலை வன்னிமை கோகர்ண வன்னியும் பதவியா வன்னிமை லோகநாத தண்டநாயக்கனும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்களாம். மகா மந்திரி பரநிருபரை இன்று சந்திக்கிறார்கள். அப்பா முதலியும் காக்கை வன்னியனும் அவர்களுடன் இணையலாம்."



செங்கை ஆழியான்

சங்கிலி நிமிர்ந்தமர்ந்தான்.


"இன்னொரு இனிய செய்தி... தங்கள் தங்கை பரவை உண்டாகியுள்ளாள்..."

சங்கிலி மீண்டும் அரசமாதேவியை மாடத்து அறையில் சந்தித்தான். மகாமந்திரியை வன்னியர் சந்திப்பதைக் கூறினான்.

"யார் இந்த வன்னியர்கள்? யாழ்ப்பாணத்தில எப்படிக் குடியேறினார்கள்?" என்று வினவினாள் மாதேவி.

சங்கிலி விபரித்தான்:

"யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குத் தெற்கே பிரதான நிலத்தில் அமைந்தது வன்னி.



நல்லூர் இராசதானியில் படைவீராகளின் நினைவாக அமைக்கப்பட்ட கூட்டத்தார் கோவில்

## வன்னியர் வருகை

இதனை அடங்காப்பற்று எனவும் அழைப்பர். இந்த வன்னிப்பிரதேசத்தில் பனங்காமம், முள்ளியவளை, கருநாவல்பற்று, தென்னமரவாடி, மேல்பற்று, கரிக்கட்டுமூலை, செட்டிக்குளம் ஆகிய ஏழும் முக்கிய குறுநிலங்களாகும். அவற்றைவிட பதவியா, திருகோணமலை, பெருங்காலிப்பற்று, முசலிப்பத்து, உமைப்பாலூர், ஓமந்தை, துணுக்காய், கொட்டியாரம், தட்டுக்குளம், மட்டக்களப்பு, மண்முனை, பழுகாமம், போரதீவு, புத்தளம், மகாவன்னி என்பன இருக்கின்றன. மகாவன்னி அநுராதபுரப் பிரதேசத்தை உள்ளடக்கியிருந்தது.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஸ்தாபித்த முதலாவது ஆரியச் சக்கரவர்த்திக்கு தனது மாமன் மகளாகிய சமதூதி என்பாளை மணம் முடிக்க எண்ணம் வந்தது. அதனால், மாமனாகிய பாண்டிய மன்னனுக்கு முதலில் தூது அனுப்பினான். பாண்டிய மன்னன் அறுபது வாட்படை வன்னியரை அழைத்து அவர்களோடு இளவரசியை அனுப்பி வைத்தான். யாழ்ப்பாண அரசன் கூட்டி வந்த வன்னியரை அடங்காப் பற்றினை ஆள நியமித்து ஆண்டு தோறும் தனக்குத் திறை தரும்படி பணித்தான். அவர்கள் தாம் அழைத்து வந்த பதினெண் சாதியினருடன் வன்னிப் பிரதேசத்தில் குடியேறினர். இப்



பிரதேசங்களை ஏற்கனவே ஆண்ட தலைவர்களை வெற்றி கொண்டனர். ஆட்சிமுறை யாழ்ப்பாண அரசினை ஒத்திருந்தது. வன்னியர் தலைமையில் முதலியார், பண்டாரப் பிள்ளை, கங்காணி, உடையார், மணியக்காரன், தலையாரி ஆகியோர் இருந்தனர்.

வன்னியர்கள் தத்தமக்குரிய சின்னங்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டார்கள். உதாரணமாக திருமலை வன்னியனார் மரகதச் சிம்மாசனத்தை கொண்டிருக்கிறார். புத்தள முக்குவ வன்னிமை ராஜ வன்னியர் எனப்படுவார். அவர், வெள்ளி வாள், கவசம், கணையாளி என்பவற்றினைக் கொண்டுள் ளார். புத்தளத்து வன்னிமை முத்திரை கூடத்தைக் கொண்டுள்ளார். திருமலை வன்னியர், தனியுண்ணா பூபால வன்னியர் எனப் புகழப்படுவர். அதிக சுதந்திரமும் அதிகாரமும் உடையவர். *(தொடரும்)*

# இலங்கைக்கு அமெரிக்கா விடுத்துள்ள எச்சரிக்கை !

ஈழத்தமிழர்களின் மனக்குறைகள் தீர்க்கப்படாமல் போனாலோ, போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படாது போனாலோ, நாட்டில் இன்னொரு மோதல் வெடிக்கக் கூடும் என்று அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே.சிசன் கடந்த வாரம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இது போன்ற எச்சரிக்கை அமெரிக்காவிடம் இருந்து விடுக்கப்படுவது இதுதான் முதல் முறை என்றில்லை. ஏற்கனவே இதே கருத்தை அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கும் பலமுறை வலியுறுத்தியுள்ளார். எனினும், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில், அமெரிக்கத் தூதுவர் விடுத்துள்ள இந்த எச்சரிக்கைக்கு சர்வதேச அளவில் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் அவர் நிகழ்த்திய இந்த உரை, இலங்கை தொடர்பான அமெரிக்கக் கொள்கையை வெளிப்படுத்தும் வகையிலும், அமெரிக்காவின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்ற கேள்விக்கான பதிலை அளிப்பதாகவும் அமைந்திருந்தது.

வழக்கமாக, அமெரிக்க இராஜதந்திரிகள் மறைமுகமாகவே கருத்து வெளியிடுவர்.

அதாவது, ஒருவிடயத்தை நேரடியாக கூறாமல், மறைமுகமாக எச்சரிப்பது அவர்களின் பாணியாக இருக்கும். ஆனால், அமெரிக்கத் தூதுவரின் இந்த உரை அப்பட்டமான உண்மைகளை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தது சற்று வித்தியாசமானது.

இங்கையிடம் இருந்து அமெரிக்கா எதனை எதிர்பார்க்கிறது என்பதை மிகவும் நேர்த்தியாக வெளிப்படுத்தியுள்ளது இந்த உரை.

அமெரிக்க ராஜதந்தரிகளின் சொல்லாடல்கள் பலவேளைகளில் பலருக்கு மயக்கத்தைக் கொடுப்பதுண்டு.

ஆனால், மிக்சேல் ஜே சிசனின் இந்த உரையில் அத்தகைய சொல்லாடல் மயக்கத்தைக் காண வில்லை. அதுமட்டுமன்றி, ஜெனிவா தீர்மானத்திற்கமைய இலங்கை நடந்து கொள்ளத் தவறினால், அடுத்து, அமெரிக்கா என்ன செய்யும் என்ற கேள்விகளுக்கும் அவர் பதிலளித்துள்ளார்.

இதுதான் மிக முக்கியமான விடயம்.

அடுத்த கட்டம் என்பது இலங்கை அரசின் கைகளில் தான் உள்ளது என்பதை தெளிவாக கூறியுள்ள அதே நேரத்தில், அமெரிக்காவின் தெரிவு என்னவாக இருக்கும் என்பதையும் அவர் கூறத் தயங்கவில்லை.

கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அனைத்துலக சுதந்திர விசாரணைப் பொறிமுறை பற்றிய, நீண்டகால பரிந்துரை குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார். இது கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே அடுத்தகட்ட நடைமுறைகள் குறித்து ஆராயும் போது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் அதற்கும் அப்பாலுள்ள பொறிமுறைகள் குறித்தும் மீளாய்வு செய்யப்படும் என்று அவர் தெளிவாக கூறியுள்ளார். ஐ.நர். மனித உரிமைகள் பேரவைக்கு அப்பால் செல்லவும் அமெரிக்கா தயாராகி வருகிறது என்பதையே அமெரிக்கத் தூதுவரின் இந்தக் கருத்து வெளிப்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தை அமெரிக்கா இத்தோடு கைவிட்டுவிடப் போவதில்லை என்பதையும், அதற்கு அப்பாலும் இலங்கை மீதான அழுத்தங்களும், நெருக்கடிகளும் தொடரப்போகின்றன என்பதையும் அமெரிக்கத் தூதுவரின் உரையில் இருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது.

அதேவேளை, அமெரிக்கத் தூதுவரின் இந்த உரை நிகழ்த்தப்பட்ட மறுநாள், நாடாளுமன்றத்தல் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜெனிவாத் தீர்மானத்தை ஏற்பதில்லை என்ற நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவித்தார். இதுபற்றி அமெரிக்காவுடனோ, வேறு எவருடனோ பேசப்போவதில்லை, யாருக்கும் அறிக்கை கொடுக்கவோ, ஆலோசனைகளை ஏற்கவோ போவதில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சில வாரங்கள் கழிந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் போக்கை உணர்ந்து அமெரிக்கத் தூதுவரின் இந்தக் கருத்துகள் வெளிப்பட்டுள்ளது. ஜெனீவாத் தீர்மானத்தின் உள்ளடக்கம் இலங்கைக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கத் தவறிய போதிலும், அமெரிக்கா இதனை இலகுவானதொன்றாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஜெனீவா தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் அமெரிக்கத் தரப்பில் இருந்து அடிக்கடி வெளியான அறிக்கைகள், கருத்துக்கள் இதனை உணர்த்துகின்றன. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அடுத்தசில மணித்தியாலங்களிலேயே அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் அறிக்கை ஒன்று வோசிங்டனில் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நுலன்ட் என்று பலர் தரப்பில் இருந்தும் அமெரிக்காவின் அறிக்கைகளும், கருத்து களும் வெளியாகின. இவை அனைத்திலுமே ஜெனிவாதீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும், இல்லாவிட்டால் அடுத்த கட்டம் குறித்த எச்சரிக்கையை கொண்டிருந்தன.



இந்த நிலையில் அமெரிக்காவின் அழுத்தங்களை இலங்கை சாதாரணமாக எடுத்துக் கொண்டுள்ளது போலவே தெரிகிறது. ஏனென்றால், ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அப்பால், ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு இந்த விவகாரத்தை கொண்டு சென்றால், அங்கே சீனாவும் ரஷ்யாவும் தமக்கு கை கொடுக்கும் என்ற கணிப்பு இலங்கைக்கு இருக்கிறது. இந்த அடிப்படையான இராஜதந்திரக் கணக்கைக்கூட்டிப் போடத் தெரியாமல் அமெரிக்கா இத்தகைய எச்சரிக்கைகளை விடுத்திருக்காது. ஒருபோதும் அமெரிக்கா தானாகச் சென்று தலையில் மோதிக்கொள்ளும் வகையில் முடிவுகளை எடுக்காது என்று உறுதியாக நம்பலாம். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இம்முறை தீர்மானத்தை முன்வைப்பதில் அமெரிக்கா காட்டிய கவனத்தில் இருந்து புரிந்து கொள்ளலாம். அதிகளவு உறுப்பினர்களின் ஆதரவுக்காக தனது தீர்மானத்தையே அமெரிக்கா நீர்த்துப்போக வைத்தது.

இலங்கைக்கு எதிராக அடுத்த கட்டப் பொறிமுறைகள் பற்றியும் ஆலோசிக்கநேரிடும் என்று அமெரிக்கா கூறுகிறது என்றால், அடுத்த கட்டங்களில் வரக்கூடிய சிக்கல்களை அது சிந்திக்கவில்லை என்று ஒருபோதும் கருத முடியாது. இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் தோன்றியுள்ள இராஜதந்திர நெருடல் இப்போது தீவிரமாகி வருவதாகவே தெரிகிறது. இந்த இறுக்கமான போக்கை அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தினால், இலங்கை என்னதான் செய்யப் போகிறது என்ற கேள்வி எழுகிறது.

தொடர்ச்சியான அழுத்தங்களின் ஊடாக இலங்கையை கொஞ்சமேனும் பணிய வைக்கலாம் என்பதுதான், அமெரிக்காவின் நிலைப்பாடாக உள்ளது. ஆனால், அது முடியாதுபோலவே உள்ளது இலங்கையின் நிலை. இந்நிலையில் இருதரப்பின் இறுக்கமான நிலைப்பாடும் இலங்கையை மீண்டும் சர்வதேச களத்துக்கு இழுத்துச் செல்லப் போகிறது. அந்தக்களம் ஜெனிவாவா அல்லது நியுயோர்க்கா அல்லது ஹேக்கா எனபதற்கு காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

430


## நஷ்டம் மூன்று மடங்கு



வெகுகாலத்திற்கு முன் பாரசீக நாட்டை குஸ்ரோ என்பவன் ஆண்டு வந்தான். அவனுக்கு மீன்களென்றால் மிகவும் பிரியம். ஒருநாள் அவன் தன்னுடைய மனைவி ஷிரீனுடன் உப்பரிகையில் அமர்ந்திருக்கையில் ஒரு செம் படவன் ஒரு உயர்ந்த ரக ஜாதி மீனை அவனுக்குப் பரிசாகக் கொண்டு வந்து கொடுத்தான். அது மிகப்பெரிதாகவும் பார்ப்பதற்கு அழகாகவும் இருந்ததால் அரசன் மிகவும் மகிழ்ந்து அவனுக்கு நான்காயிரம் மோகராக்களைப் பரிசளித்தான்.

தன்னுடைய கணவர் இது மாதிரி சில சமயங்களில் தலை கால் தெரியாமல் பணத்தை தண்ணீர் போல வாரி இறைப் பதைக்கண்டு ஷிரீன் பொருமி னாள். அவ்விதம் பரிசு கொடுப் பது அவளுக்குச் சற்றும் இஷ்டமே இல்லை. செம்படவன் சென் றதுமே அவள் ஒரு மீனுக்கு நான்காயிரம் நான்காயிரம் மோகராக்களா? இப்படிக்கொடுத் தால் சிறிது நாட்களில் கஜானா காலியாகிவிடும். உடனே அந்தச் செம்படவனைக் கூப்பி ட்டு ஏதோ சாக்குச்சொல்லி மோகராக்களை திரும்ப வாங் கிக்கொள்ளுங்கள் என்றாள்.

கொடுத்த பணத்தை வாங்கிக்கொள்வது சரியல்ல எனக் கூறினான் குஸ்ரோ. அதற்கு ஷிரீன் உங்கள் கௌரவத்திற்குச் சற்றும் கெடுதல் ஏற்படாமல் அந்தப் பணத்தை வாங்கி விடலாம். அவனைக்கூப்பிட்டு அந்த மீன் ஆணா, பெண்ணா என்று அவனிடம் கேட்கலாம். அவன் ஏதாவது ஒன்றைச் சொல்வான். நமக்கு இந்த இன மீன் தேவை இல்லை



## அம்புலிமாமா கதைகள்

என்று கூறி பணத்தை வாங்கிக்கொண்டு விடலாம் என்றாள்.

செம்படவனும் திரும்ப வரவழைக்கப்பட்டான். அப்போது அரசன் அவனைப்பார்த்து இந்த மீன் ஆணா, பெண்ணா என்று கேட்கவே செம்படவனும் பணிவாக அரசே இவ்வகை மீன்களில் ஆண், பெண் என்பது கிடையாது. ஒவ்வொரு மீனும் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் என்றான்.

இதைக்கேட்ட உடனே அரசன் பலமாகச் சிரித்து அவனுக்கு இன்னும் நான்காயிரம் மோகராக்களை இனாமாகக் கொடுத்தான். அவ்வளவு பொற் காசுகளையும் செம்படவன் எண்ணி பொன் முடிப்புக்களை எடுத்துக்கொண்டான். வெகு சந்தோசத்துடன் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு அரண்மனையைவிட்டு வெளியேறினான்.

அரண்மனை வாசலைத் தாண்டும் போது ஒரு நாணயம் அவனது கூடையிலிருந்து வெளியே விழுந்தது. உடனே செம்படவன் அங்கேயே வைத்து அந்த நாணயத்தைத் தேடிக் கண்டுபிடித்து தன் பையில் போட்டுக் கொண்டான்.

இதையெல்லாம் மாடியின் மேலிருந்து குஸ்ரோவும் ஷிரீனும் கவனித்துக்கொண்டு இருந் தனர். ஷிரீன் குஸ்ரோவைப் பார்த்து பார்த்தீர்களா அவனுடைய அற்பத்தனத்தை! ஒருகாசு கூட வேறு யாருக்கும் கிடைக்கக் கூடாது என்று அதைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்துப் போட்டுக்கொள்கிறான். இவனுக்கு பணமே



கொடுக்கக்கூடாது, கூப்பிடுங்கள் அவனை என்றாள்.

ஷிரீன் கீழே விழுந்த நாணயத்தை பொறுக்கிக் கொண்டது அவனுக்கு அதன்மேல் மதிப்பைக் காட்டுகிறது என்று எடுத்துக்கொள்ளலாமே என்றான் குஸ்ரோ. அப்படியில்லை அந்த ஒரு காசுகூட மற்றவர்கள் கைக்கு அகப்படக்கூடாது என்று நினைக்கும் கயவன் அவன் என்றாள்.

உடனே அவனும் காவலாளிக்கு உத்தரவிட செம்படவன் உடனே அங்கு கொண்டு வரப் பட்டான். அவனைப் பார்த்து ஏய் அற்பனே ஒரு நாணயம் விழுந்து விட்டால் அதையும் தேடிக்கண்டுபிடித்து எடுத்துக் கொள்கிறாயே. அந்த நாணயம் வேறு எவனுக்காவது கிடைக்கட்டுமே என்று விட்டுப் போகக் கூடாதா என்று மிகுந்த கோபத்துடன் குஸ்ரோ கேட்டான்.

இதற்கு அந்தச் செம்படவன் பிரபோ நாணயத்தின் ஒருபுறம் தங்களது தலையும் மறுபுறம் தங்களது முத்திரையும் உள்ளது. நாணயம் பூமியின் மீது கிடந்தால் வருவோர், போவோர் மிதித்துப்போவார்கள். அவ்விதம் செய்வது தங்களை அவமதிப்பது போலாகும். அந்த மாதிரி நடக்கக்கூடாது என்பதற்குத்தான் நான் அந்த நாணயத்தைத்தேடி எடுத்துக் கொண்டேன் என்றான்.

இதைக்கேட்டு குஸ்ரோ இன்னும் சந்தோசமடைந்து மேலும் நான்காயிரம் மோகராக்களை அவனுக்குப் பரிசா கக் கொடுக்க உத்தரவிட்டான். ராணியின் புத்திமதியின் பேரில் அந்தச் செம்படவ னைக் கூப்பிட்டதற்காக மேலும் எட்டாயிரம் மோகராக்கள் கொடுக்க வேண்டி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதியே; டெசோ அமைப்பின் கூட்டத்தில் தீர்மானம்

(சென்னை)

கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என பிரகடனப்படுத்தக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது என்று டெசோ அமைப்பின் கலந்துரையாடல் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

டெசோ அமைப்பின் கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

இதில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தில் 1974 ஆம் ஆண்டில் கச்சதீவு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட போது பாக்கு நீரிணை கடலில் இரு நாட்டு மீனவர்களும் தொடர்ந்து மீன்பிடிக்கும் வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய அரசும் இலங்கை அரசும் ஒப்பந்தத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் எனவும் இலங்கை அரசு எக்காரணத்தைக் கொண்டும் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் தடுக்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் எந்தவொரு பகுதியையும் வேறு ஒரு நாட்டிற்கு விட்டுக் கொடுப்பதெனில் நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்கு வைத்து சட்டம் இயற்றப்பட வேண்டும் எனவும் அவ்வாறு செய்யாததால் விட்டுக் கொடுத்தது சட்டப்படி செல்லாது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே, 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யக் கோரி டெசோ அமைப்பு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என வலியுறுத்தியுள்ளது. (அ)

# இந்திய குழுவினர் தொடர்பில் அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி?

(கொழும்பு)

அண்மையில் இலங்கை வந்து திரும்பிய இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கை தொடர்பில் சந்தேகமுற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் விஜயம் தொடர்பில் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார் என இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய நாடாளுமன்ற குழுவினர் நாட்டிலிருந்து வெளியேறியவுடன் தனது அதிகாரிகளை அழைத்து அவர்களின் இலங்கை விஜயம் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

ஒன்பது பேர் கொண்ட இந்திய நாடாளுமன்ற குழுவினர் இலங்கை பாராளுமன்றத்தில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவையும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸையும் சந்தித்த பின் யாழ்ப்பாணம் சென்றிருந்தனர். அங்கு அவர்கள் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்ததுடன் கொழும்பு திரும்பியதும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இதனையடுத்தே இந்தக் குழுவினரின் நடவடிக்கை தொடர்பில் சந்தேகமுற்ற ஜனாதிபதி இது தொடர்பான அறிக்கை ஒன்றினை அதிகாரிகளிடம் கோரியுள்ளார் எனச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ-5)

# விசா வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

தென்கொரியாவுக்கான தொழில் விசா வழங்குவது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. அங்கு நிலவுகின்ற அச்சுறுத்தலான அரசியல் சூழ்நிலை காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணிமனை தெரிவித்துள்ளது.

வருடாந்தம் இலங்கையில் இருந்து 5 ஆயிரம் பேர் தென்கொரியாவுக்கு வேலைவாய்ப்புகளுக்காக செல்கின்றனர். தற்போது அங்கு 25 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றி வருகின்றனர். எனினும் தென்கொரியாவுக்கும் வடகொரியாவுக்கும் இடையில் எப்போது வேண்டுமானாலும் யுத்தம் ஏற்படலாம் என்ற நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் 90 சதவீதமான தென்கொரிய தொழில் விசாக்கள் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கைக்கு உதவியளிக்கையில் நிபந்தனைகள் விதிப்பதில்லை

## இந்தியா அறிவிப்பு

வெளிநாடுகளுக்கு உதவியளிக்கும் போது நிபந்தனைகளை விதிப்பதில்லையென அறிவித்துள்ள இந்தியா உதவிபெறும் நாடுகளின் இறைமைக்கு குந்தகம் விளைவிப்பதில்லை எனவும் தனது உதவிகளை கேட்கும் நாடுகளுக்கு வழங்குவதாவும் இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு வழங்கும் போது எவ்விதமான நிபந்தனைகளும் விதிக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளது.

எமது ஒத்துழைப்பு உதவிக்கான கேள்வியின் அடிப்படையிலேயே அமையும். அது பங்காளி நாடுகளின் முன்னுரிமை விருப்புகளுக்கு ஏற்பவே இருக்கும். நாம் உதவிகளை நிபந்தனைகளோடு இணைப்பதில்லை. நாம் அவற்றுக்காக கொள்கைகளை வகுக்கப்போவதுமில்லை. நாம் இந்த நாடுகளின் இறைமைக்கு சவாலாக இருப்பதுமில்லை.

நாம் அபிவிருத்தி அனுபவங்கள் மூலவளங்களை பரிமாறிக் கொள்வதை ஊக்குவிக்கின்றோம் என இந்திய வெளிவிவகார செயலாளர் ரஞ்சன் மத்தாய் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தென்- தெற்கு ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு- தெற்கு ஒத்துழைப்புக்கு தென்- தெற்கு ஒத்துழைப்பு பிரதியீடாக இருக்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த 10 வருடங்களில் சலுகை அடிப்படையில் இந்தியா 9.5 பில்லியன் அமெரிக்க டொலரை இந்தியா பல்வேறு வகைப்பட்ட திட்டங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)




★1492-வாசனைப் பொருட்களை ஆசியாவில் கொள்வனவு செய்யும் உரிமையை கொலம்பஸ் ஸ்பெயின் அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

★1524-இத்தாலிய நாடுகாண் பயணி ஜோவானிடா வெரசானோ நியூயோர்க் துறைமுகத்தை அடைந்தார்.

★1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா கூட்டணியில் இருந்து விலகியது.

★1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் வட கரோலினாவின் பிளைமவுத் நகரைத் தாக்கினர்.

★1895-சீன- ஜப்பான் போரை முடிபுக்குக் கொண்டு வந்த ஒப்பந்தம் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.

★1941-இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியப் பேரரசு ஜேர்மனியிடம் சரணடைந்தது.

★1969-செக்கோசிலவாக்கியாவின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அலெக்சாண்டர் டுப்செக் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★1970-அப்போலோ 13 விண்கப்பல் பழுதடைந்த நிலையில் தனது பயணத்தை இடைநிறுத்தி பூமிக்குத் திரும்பியது.

★1971-முஜிபுர் ரகுமான் தலைமையில் வங்காளதேச மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

★1975-கம்போடியாவில் கெமர் ரூச் படைகள் தலைநகர் நாம் பென்னைக் கைப்பற்றின. கம்போடிய அரசு சரணடைந்தது.

### பிறப்புக்கள்

★1756-தீரன் சின்னமலை, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ.1805)

★1894-நிக்கிட்டா குருஷேவ், சோவியத் ஒன்றியத்தின் பிரதமர் (இ.1971)

★1916-சிறிமாவோ பண்டாரநாயக்கா, இலங்கையின் பிரதம மந்திரி, உலகின் முதல் பெண் பிரதமர் (இ.2000)

★1946-ஜோர்ஜெஸ் கோஹ்லெர், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ.1995)

★1966-விக்ரம், தமிழ் திரைப்பட நடிகர்

★1972-முத்தையா முரளிதரன், இலங்கைப் பந்து வீச்சாளர்

★1979-சித்தார்த், பன்மொழி திரைப்பட நடிகர்

### இறப்புக்கள்

★1761-தொமஸ் பேயிஸ், ஆங்கிலேயக் கணிதவியலாளர்

★1790-பெஞ்சமின் பிராங்கிளின், அமெரிக்க கண்டுபிடிப்பாளர்(பி.1706)

★1942-ஜீன் பெரின், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (பி.1870)


★1975-சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், சுதந்திர இந்தியாவின், முதல் குடியரசுத் துணைத் தலைவர், இரண்டாவது குடியரசுத் தலைவர் (பி.1888)

★1976-ஹென்ரிக் டாம், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1895)

★1994-றொஜர் ஸ்பெரி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1913)

★2004-சௌந்தர்யா, இந்திய நடிகை (பி.1971)

### பெஞ்சமின் பிராங்கிளின்



பெஞ்சமின் பிராங்கிளின் 1706 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் பிறந்தார். 17 பிள்ளைகளில் பத்தாவதாக பிறந்தவர். அவர் ஏழ்மையின் காரணமாக ஓராண்டுக்கும் குறைவாகவே பாடசாலை சென்றார். தனது ஏழாவது வயதிலேயே கவிதைகள் எழுத ஆரம்பித்தார். இவர் ஐக்கிய அமெரிக்காவை உருவாக்கியவர்களுள் ஒரு மூத்த தலைவர் ஆவார். இவர் ஓர் அரசியல் தலைவர் மட்டுமல்ல ஒரு எழுத்தாளர், அறிவியலாளர், கண்டுபிடிப்பாளர் ஆவார்.

### கண்டுபிடிப்புக்கள்

மின்சாரத்தின் மீது ஆய்வுகள் செய்தவர். மின்னலில் கூட மின்சக்தி இருக்கின்றது என்பதை கண்டறிந்தார். கூரிய முனைகளால் மின்சாரம் ஈர்க்கப்படுகின்றது. அதேபோல் மின்னலும் கூரிய முனைகளால் ஈர்க்கப்படும் என்பதை ஆய்வின் மூலம் நிரூபித்தார்.

மின்னல் இடியிலிருந்து கட்டடங்களைப் பாதுகாக்க இடிதாங்கியைக் கண்டுபிடித்தார். முதியவர்கள் எட்டப் பார்வைக்கும் கிட்டப் பார்வைக்கும் சேர்த்து அணியும் ஒரே கண்ணாடியான வெள்ளெழுத்துக் கண்ணாடி (Bifocal lens) பிராங்கிளினின் கண்டுபிடிப்பாகும்.

1730 ஆம் ஆண்டு நடமாடும் நூல் நிலையம் என்ற அற்புத திட்டத்தை உலகுக்கு அறிமுகம் செய்தார். இன்று உலகப் புகழ்பெற்ற அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றான பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தை நிறுவினார். 1789 ஆம் ஆண்டு பிராங்கிளின் மேற்பார்வையில் உருவான அரசியல் சட்டம் தான் இன்றும் அமெரிக்காவை வழிநடத்துகிறது.

பிராங்கிளின் 1790 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி தனது 84 ஆவது வயதில் காலமானார். அவரின் கருத்து இறந்த பின்னரும் நீங்கள் மறக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால் ஒன்று சிறந்த படைப்புக்களை எழுதுங்கள். அல்லது பிறர் உங்களைப் பற்றி எழுதும் அளவுக்கு ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழுங்கள் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியப் போர் மீண்டும் தொடங்குமா?



கொரிய தீபகற்பத்தை 60 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. எப்போது போர் வெடிக்குமோ? எத்தனை இலட்சம் பேர் அழிவார்களோ என்ற பேரச்சம் உலகைச் சூழ்ந்துள்ளது.

ஏனெனில் நடக்கப்போவது சாதாரண போர் அல்ல, அணு ஆயுதப்போர் என்பதாலேயே இந்தப் பேரச்சம். எனவே, கொரியப் போர் தொடங்கினால் அது மூன்றாம் உலகப் போராக மாற்றமடையுமா? என்பதுதான் இன்றுள்ள ஊடகங்கள் பலவற்றின் கேள்வியாக உள்ளது.

ஏனெனில் அணு ஆயுதப் போராக மாற்றமடையும் என எச்சரிக்கப்படும் கொரியப் போர் கொரியக் குடாவிற்குள் மட்டும் முடிந்துவிடப்போவதில்லை. அது ஏனைய நாடுகளையும் பாதித்து அந்நாடுகளையும் போரில் குதிக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது. ஆனால், அவ்வாறான ஒரு போர் இப்போதைக்கு சாத்தியமில்லை என்பதுதான் இராணுவ வல்லுனர்களின் கருத்தாக உள்ளது. வடகொரியாவின் போர் மிரட்டல்கள் வெறும் வாய்ச் சவடால்களே என்றும் அவர்களின் செயற்பாடுகளே அடுத்த கட்டத்தை தீர்மானிக்கும் என்றும் அமெரிக்கா கருதுகின்றது. ஆனால், வெளியார் யாரும் நுழையமுடியாதவாறு இரும்புக் கோட்டையாகத் திகழும் வடகொரியாவின் பலம் என்ன? பலவீனம் என்ன என்பதை கண்டறிவது அவ்வளவு இலகுவானதல்ல. வட கொரியா களத்தில் இறங்கினாலேயே அதனை ஓரளவிற்கு கண்டறிய முடியும். அதனாலேயே வடகொரியா போர்க்களத்தில் இறங்கவேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களும் உண்டு. வடகொரியா ஏன் இந்தளவு போர் வெறிகொண்டு நிற்கிறது. தனது சகோதரர்கள் வாழும் தென்கொரியாவை அழிக்கவேண்டும் என்ற அதன் சிந்தனைக்குக் காரணம் என்ன? இதனை அறிந்து கொள்வதற்கு கொரியாவின் வரலாற்றை கொஞ்சமேனும் அறிந்துகொள்வது நல்லது.

5000 ஆண்டு வரலாறு கொண்டதாகக் கூறப்படும் கொரிய வரலாற்றில், 1910 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் உலகின் கவனத்தை கொரியா ஈர்த்தது. ஒரே தேசமாக இருந்த கொரியாவை ஜப்பான் கைப்பற்றியதில் இருந்துதான் அந்நாடு போர்களையும் சந்திக்கத் தொடங்கியது. அயல் நாடுகளை ஆக்கிரமிக்கவும் தன்னைப் பலவானாகக் காட்டுவதற்கும் ஜப்பான், எடுத்த பகீரதப் பிரயத்தனங்களால் வந்த வினையால், இரண்டாம் உலகப்போரில் பாரிய வீழ்சியையும், பேரழிவையும் சந்தித்தது ஜப்பான். ஜப்பான் மீண்டும் நிமிர்ந்தெழ முடியாதளவிற்கு அமெரிக்கா கொடுத்தது இரு அணுகுண்டுத் தாக்குதல்.

1945 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபோது ஜப்பானின் ஆளுகைக்குள் இருந்து விடுபட்டது. ஆனால், பேயிடம் இருந்து தப்பி பிசாசிடம் மாட்டிய கதையாக, ஜப்பானிடம் இருந்து விடுபட்டு கொரியாவை போரில் வெற்றி கொண்ட நேசநாடுகளான அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் தத்தமது செல்வாக்குப் பகுதியாக பிரித்துக்கொண்டன.

ஒரேநாடு இரண்டு துண்டங்களாகின. வடபகுதியை சோவியத் ஒன்றியத்தின் ஆதரவுடன் கிம் இல்சுங்- இன் தலைமையில் கொம்யூனிஸ்ட் கட்சியினரும், தென் பகுதியை அமெரிக்க ஆதரவு பெற்ற முதலாளித்துவ ஆட்சியாளர்களும் கைப்பற்றி ஆட்சிமைத்தனர். ஆனால், வடகொரியா சும்மா இருக்கவில்லை. தென்பகுதியை மீட்டெடுத்து ஒரே தேசமாக்க பலமுறை முயன்றது. ஆனால், அது கைகூடவில்லை.

1950இல் தென்கொரியாவை முற்றிலும் எதிர்பாராத ஒரு தருணத்தில் தாக்கிய வடகொரியா, தென்கொரியத் துருப்புகளால் ஈடுகொடுக்க முடியாமற்போன நிலையில், ஜப்பானில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படைகள் விரைந்துவந்து தோள் கொடுத்தன. ஆனாலும், வடகொரியப் படையினரின் மூர்க்கத்தனமான தாக்குதலை எதிர்கொள்ள முடியவில்லை. வட கொரியப்படை தென்கொரியத் தலைநகர் வரை முன்னேறியிருந்தது.

நிலைமை கையை மீறிப்போய் தென்கொரியா முழுமையாக வடகொரியாவிடம் வீழ்ந்துவிட்டால் பின்னர் மீட்டெடுப்பது முடியாத காரியம் என்பதைப் புரிந்துகொண்ட அமெரிக்கா, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐ.நா.வின் பாதுகாப்பு சபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தது. இதை சோவியத் ஒன்றியம் எதிர்த்தது. ஐ.நா.சபையையே புறக்கணித்தது. ஆனாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. பாதுகாப்பு சபையில் அப்போது மக்கள் குடியரசு சீனா அங்கம் பெற்றிருக்கவில்லை.

இதனால், அமெரிக்காவின் தீர்மானம் கடும் எதிர்ப்பின்றி நிறைவேறியது. 3 இலட்சம் பேரைக் கொண்ட ஐ.நா.வின் சர்வதேச படை உருவானது. பெயர்தான் சர்வதேசப் படை. ஆனால், அப்படையில் இருந்தவர்களில் 2.60 இலட்சம் பேர் அமெரிக்கர்கள். இந்தப்படை 1950 செப்ரெம்பரில் கொரியாவை அடைந்தது. அதன் தாக்குதலில் வடகொரியப் படை வேகமாகப் பின்வாங்கியது. சுமார் ஒரு மாதங்களுக்குள்ளாகவே பறிபோன தென்கொரியப் பகுதிகள் அனைத்தும் மீட்கப்பட்டன.

ஐ.நா.வின் படைகள் அத்துடன் நிற்கவில்லை. அமெரிக்காவின் ஆசையும் அத்துடன் அடங்கவில்லை. ஓடுகின்றவர்களைக் கண்டால் துரத்துகின்றவர்களுக்கு சந்தோசம் தானே. வடகொரியப் படையின் வேகமான பின்வாங்கலைப் பார்த்த அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஹரி.எஸ். ட்ரூமென் ஐ.நா. சர்வதேசப் படையினரை மேலும் முன்னேறப் பணித்தார். ஐ.நா. சர்வதேசப்படை வடகொரியாவுக்குள்ளும் புகுந்தது. வடகொரியாவுடன் அதன் நடவடிக்கை நின்றிருந்தால் பரவாயில்லை.

சீன-வடகொரிய எல்லையாக இருக்கும் யாலு ஆற்றின் கரைகளை நோக்கியும் படை முன்னேறியது. இந்த யாலு ஆறுதான் வடகொரியா-சீனாவின் 60 விதத்திற்கும் அதிகமான எல்லையாக இருக்கின்றது. இந்த ஆற்றை நோக்கி ஐ.நா. படைகள் முன்னேறியது. சீனாவிற்கு சீற்றத்தைக் கொடுத்தது. -வடகொரியாவை தனது நட்பு நாடாக சீனா இன்றுவரை வைத்திருக்க முனைந்தாலும், தன்னிச்சையான அதன் போர்கள்தான் சீனாவிற்கு கோபத்தை ஏற்படுத்துகின்றன. வடகொரியாவின் போர் தனது வாசல் வரை வருவதை சீனா விரும்புவதில்லை. இதனாலேயே வடகொரியாவை போரை முன்னெடுக்காமல் தடுக்க முயல்வதற்கும், அந்நாட்டை எதிர்க்க முயல்வதற்கும் காரணம்.

ஐ.நா. படைகள் முன்னேறி வருவதை எதிர்கொள்ளத் தயாராகின சீனத் தொண்டர் படை. இந்தப் போரில் சீனா களம் இறங்கும் என்று ஐ.நா. வோ, அமெரிக்காவோ கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. விளைவு, கொரியப் போருக்குள் சீனாவும் நுழைந்தது. யாலு ஆற்றுடனான மலைப் பிரதேசங்களில் நின்று தாக்கிய சீனப் படைகளிடம், 1950 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கடும் குளிருக்கு மத்தியில் ஐ.நா. படையினரால் நின்று பிடிக்க முடியவில்லை.

இழப்புக்கள் அதிகரிக்க அதிகரிக்க ஐ.நா. படை பின்வாங்கத் தொடங்கியது. இரண்டு ஆண்டுகள் இழுபட்டு இந்தப் போரின் முடிவில் 20 இலட்சத்திற்கும். மேற்பட்டவர்கள் பலியானதாகக் கணிப்பிடப்பட்டது. 1953 இல் போர் நிறுத்தம் கையெழுத்தானது தென்கொரியாவில் நிரந்தரத் தளங்களை அமைத்துக்கொண்டது அமெரிக்கா.

இப்போது தென்கொரியப் படைகள் ஒருபறமும் வடகொரியப்படைகள் மறுபுறமும் 240 கிலோமீற்றர் நீளமுள்ள எல்லையை பாதுகாத்து வருகின்றன. ஆனால், அன்று தொட்டு இன்றுவரை போர்ப் பதட்டமே அந்த எல்லையில் இருந்து வருகின்றது. இந்நிலையில்தான், கடந்த மாத இறுதியில் தென் கொரியாவுடன் போர் தொடங்கிவிட்டதாக வடகொரியா பிரகடனம் செய்தது. அத்துடன் தென்கொரியா அரசு மற்றும் இராணுவத்துடனான தொடர்பு இணைப்புகளையும் துண்டித்துவிட்டது.

இதற்கும் மேலாகத் தங்கள் நாட்டைத் தற்காத்துக் கொள்ள அமெரிக்கா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்துவோம் என்று வடகொரியா எச்சரித்ததுதான் இன்று கொரிய தீபகற்பத்தை போர் மேகங்கள் சூழ்ந்துள்ளதற்கு முழுமுதல் காரணம். போர் தொடங்குமா? தொடங்காதா பொறுத்திருந்து பார்ப்போம்.

-விவேகன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அதிசயத்தில் செவ்வாயின் ஆதிக்கம்!

பூமியைப்போல சூரியனைச் சுற்றி வரும் கோள் செவ்வாயாகும். பூமியை அடுத்துள்ள உயர் நிலைக்கோள்களில் செவ்வாய் முதலாவது கோளாகும். பூமிக்கு சந்திரன் துணைக் கோளாக இருப்பதுபோல செவ்வாய்க்கும் இரண்டு துணைக் கோள்கள் உண்டு. செவ்வாயின் நிறம் சிவப்பும் ஒரேஞ்சும் கலந்தது.

பரத்வாசர் என்ற முனிவரின் மகன் என்று செவ்வாய் கூறப்படுகிறார். பரத்வாசர் நர்மதை நதிக்கரையில் ஆசிரமம் அமைத்து தவம் செய்து கொண்டிருக்கும் போது அங்கு நீராட வந்த தேவ மங்கையுடன் ஏற்பட்ட காதலின் விளைவாகப் பிறந்தவர்தான் செவ்வாய். தேவமங்கை தான் பெற்றெடுத்த குழந்தையை ஆற்றின் கரையிலேயே விட்டுச் சென்றுவிட பூமா தேவியால் வளர்க்கப்பட்டார். வளர்ந்து தன் தந்தை பரத்வாசர் என்று தெரிந்தபின் தந்தையிடம் எல்லா கலைகளையும் கற்று ஒரு சிறந்த தலைவனுக்குரிய தகுதிகளைப் பெற்றார்.

செவ்வாய்க்கு அங்காரகன், மங்களன் என்ற பெயர்களும் உண்டு. செவ்வாய் விநாயகப் பெருமானை வேண்டித் தவமிருந்து நவக்கிரகங்களில் ஒருவராகத் திகழும் வரத்தினைப் பெற்றார். அவர் இந்த வரத்தினைப் பெற்ற நாளும் செவ்வாய்க்கிழமையே. செவ்வாயின் சின்னம் சேவல் என்பதால் இவர் முருகனின்




அம்சமாகவும் கருதப்படுகிறார்.

கட்டுமஸ்தான உடலமைப்பிற்குச் சொந்தக்காரர். கலவரம், சண்டை, வீண்வம்பு, புரட்சி, போராட்டம், விபத்து, சித்திரவதை, கொலை, துர்மரணம், கோபம் போன்றவற்றிற்கு காரணகர்த்தா என்பதால் இவர் ஒரு பாவ கிரகமாவார். நெருப்பு இவருக்குப் பிடித்தமான ஒன்று. பிடிவாத குணமும் முரட்டு சுபாவமும் கொண்டவர். எடுத்த காரியத்தை முடிக்கும் வரை ஓயமாட்டார்.

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய் பலம்பெற்றிருந்தால் வீரர், சூரர் என பாராட்டுமளவிற்கு துணிச்சலுடன் இருப்பார். அதுவே பலமிழந்திருந்தால் எல்லாவற்றிற்கும் பயப்படும் சுபாவம் வந்துவிடும். இது மட்டுமின்றி செவ்வாய் தோஷத்தை உண்டாக்கி மண வாழ்க்கையையும் போராட்டகரமானதாக மாற்றிவிடுவார். எண்கணிதப்படி 9 ஆம் எண்ணை ஆள்பவர். பொதுவாகவே 9 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் எல்லா விடயங்களிலும் பேராசையுடையவர்களாகவும் நிதானமில்லாதவர்களாகவும் எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாகவும் பிறருக்கு அடங்கி நடக்க விரும்பாதவர்களாகவும் இருப்பார்கள். இளமைக் கால வாழ்க்கையில் கஷ்டப்படுபவர்களாக இருந்தாலும் முடிவில் தங்களுடைய மன உறுதியினால் வெற்றி பெறக் கூடியவர்கள்.

செவ்வாய் நெருப்பு காரகன் என்பதால் அதனுடன் சம்பந்தப்பட்ட தீயணைப்பு வண்டியின் நிறமும் சிவப்பு என்பதை நாம் அனைவரும் அறிவோம். போக்குவரத்தில் எந்த விபத்துக்களும் நடக்காமலிருக்க ஆங்காங்கே சிக்னல்கள் இருப்பதை நாம் அறிவோம். சிவப்பு விளக்கு எரிந்தால் நின்றுவிட வேண்டும். நிற்காமல் சென்றால் அதன் விளைவு அபாயம்தான்.

நெருப்பை உண்டாக்கப் பயன்படும் சாதாரணமான தீக்குச்சி தயாரிக்கப்பட்ட ஆண்டு எது தெரியுமா? 1827. இதன் கூட்டு என் 9. இது செவ்வாயின் ஆதிக்கமல்லவா? Police இதன் கூட்டு எண் 27 ஆகும். இது அடி, உதை, சித்திரவதை, கலவரம்,



சண்டை, சச்சரவு, இரத்தக்கசிவு, விபத்து போன்றவற்றிற்கு காரகன் செவ்வாய். இந்தப் பிரச்சினைகளைக் கையாள்பவர்கள் பொலிஸ்காரர்கள். பொலிஸ் நிலையமும் அபாயத்தின் அறிகுறியாக சிவப்பு நிறத்தில்தான் இருக்கும். பொலிஸும் 9 ஆம் எண்ணின் ஆதிக்கத்தில்தான் இருக்கும்.

அதுபோல மருத்துவமனை, மருந்துக் கடைகள், சத்திரசிகிச்சை தியேட்டர் போன்றவற்றிலும் சிவப்பு விளக்குகள் எரியும். இதற்கும் காரகன் செவ்வாய்தான். செவ்வாய் சகோதரகாரகன், பூமி காரகன் என்பதால்தான் உடன்பிறந்தவர்களாக இருந்தாலும் பூமி, மனை போன்றவற்றால் பிரச்சினை ஏற்படுகிறது.

பொதுவாகவே யாருக்கும் அடங்காதவனை அகங்காரம் பிடித்தவன் என்று கூறுகிறோம். செவ்வாய் அங்காரகன் இல்லையா! அகங்கார குணமும் அங்காரகனுக்குரியதே. செம்பு என்பது செவ்வாயின் உலோகம். செம்புக் கம்பி மின்சாரத்தை அதிவேகமாகக் கடத்தக் கூடியது என்பதால் அதைப் பயன்படுத்துகிறார்கள். மின்சாரம் போகும் போது செம்புக் கம்பியை தொட்டால் என்னாகும்? செவ்வாய் எவ்வளவு வேலை செய்கிறார்!

சேவல் செவ்வாயின் சின்னம். செவ்வாய் திடீரென்று இரத்தம் சிந்தி சாவதற்குக் காரகன். சேவலின் கழுத்தில் இரண்டு சிவப்பு நிற தாடி போன்ற அமைப்பும் தலையில் சிவப்பு நிறக் கொண்டையும் இருக்கும். எந்த சேவலாவது தானாக இறந்ததுண்டா? கழுத்து அறுபட்டு வீரமரணம்தானே எய்துகின்றது. எல்லாவற்றுக்கும் செவ்வாயின் சக்திக்குரிய குணம்தானே காரணமாகிறது.

செவ்வாய் அரசியல் கிரகம் ஆவார். சூரியனைப் போல செவ்வாயும் பலம், ஆட்சி, உச்சம், வர்கோத்தமம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் அரசியலுக்கு வந்து மக்கள் செல்வாக்கு பெற்று அரசியல்வாதியாகக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. செவ்வாய் திடீர் மரணத்திற்குக் காரகனல்லவா. இதனால்தான் கண் மூடித்திறப் பதற்குள் துப்பாக்கியால் சுடப்பட்டு இரத்தம் சிந்தியும் குண்டு வெடித்து உடல் சிதறியும் கத்தியால் வெட்டுப்பட்டு இரத்தக் களறியாகவும் மரணம் அடைகிறார்கள். புகழைக் கொடுக்கும் செவ்வாய் மரணத்தையும் கொடுப்பார்.

விண்வெளியிலிருந்து பார்த்தால் சீனப் பெருஞ்சுவர் தெரிகிறதென ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். உலக அதிசயத்தில் ஒன்றான இது செவ்வாயின் ஆதிக்கம் கொண்ட சீனாவில் கட்டப்பட்டுள்ளது. சீனக் கொடியின் நிறம் சிவப்பு. செவ்வாயின் காரகங்களில் சுவரும் செங்கல்லும் உண்டு.

ரஷ்யர்களால் கட்டப்பட்ட சுவர் பெர்லினை இரண்டாகப் பிரித்து வைத்தது. ஜேர்மனியர்கள் பல துயரங்களுக்குட்பட்ட போது உயிர் பிழைப்பதற்காக இந்தச் சுவரை ஏறி குதித்து தப்ப முயன்றும் முடியாமல் இறுதியில் மரணத்தைத் தழுவியவர்கள் நிறைய உண்டு. இது ஒரு மரணச் சுவராகவே கருதப்பட்டது.

Berlin இன் கூட்டு எண் 9. இந்த நகரிலிருந்துதான் உலகப் போர்களும் ஆரம்பமாகின. போருக்கு ஆங்கிலத்தில் War என்று பெயரல்லவா? இதன் கூட்டுத் தொகை எவ்வளவு? War 612- 9 சண்டை காரகனல்லவா செவ்வாய். 9 ஆம் எண்ணை எந்த எண்ணுடன் பெருக்கினாலும் அதன் விடையும் 9 ஆகத்தான் வரும்.

செவ்வாயின் ஆதிக்கமான 9 ஆம் எண்ணின் விட்டுக் கொடுக்காத தன்மையைக் கண்டீர்களா?

ஜோதிட சாஸ்திரம் இந்த நவீன உலகத்திற்கும் எப்படிப் பொருந்தி வருகிறதென்பதை இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

# 48 மணிநேரத்தில் 10 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த 48 மணி நேர காலப் பகுதியினுள் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 10 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அநுராதபுரம், கெக்கிராவ, காலி, ஹங்வெல்ல, அஹுங்கல்ல, காட்டகஸ்திரிய மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களிலேயே அதிக அளவிலான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

பண்டிகை காலப்பகுதியினில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது 312 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முதல் இன்று வரையான காலப்பகுதியினில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தவிர நாடளாவிய ரீதியாக மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மற்றும் வீதி சட்ட திட்டங்களை மீறுபவர்கள் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# கணனி பயிற்சி

பச்சிலைப்பள்ளி எல்லைக்குட்பட்ட பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளுக்கான கணனிப் பயிற்சி வகுப்புக்கள் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினரால் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இக்கணனிப் பயிற்சியை பெற விரும்புவோர் பளை முல்லையடியில் அமைந்துள்ள அபிவிருத்திப் பேரவை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தலைவர் கு.ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (அ-3-29)

# இலங்கை மீனவர்களுடன் பேச ஏற்பாடு செய்யுங்கள்

## தமிழக மீனவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு ஒழுங்கு செய்யுமாறு தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக இலங்கை-இந்திய கடற்பரப்பில் தாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தீர்வு காணும் வகையில் இலங்கை மீனவர்களுடன் தாங்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். எவ்வாறாயினும் இரண்டு தரப்பினருக்கும் இடையில் ஏற்கனவே மூன்று தடவைகள் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இதன்போது காணப்பட்ட இணக்கப்பாடுகள் அரசாங்கங்களின் ஒத்துழைப்பு இன்மை காரணமாக அமுலாக்கப்படவில்லை என்று தமிழக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் தங்களின் வாழ்வாதாரத்தை முறியடிக்கும் தமிழக மீனவர்களின் செயற்பாடுகளை எதிர்ப்பதாக இலங்கை மீனவர்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளினை காணவில்லையென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த நான்காம் திகதியன்று தாவடிச் சந்தியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளே மேற்படி காணாமல் போயுள்ளது.

சுன்னாகத்தினைச் சேர்ந்த செல்வேந்திரகுமார் அருண் என்பவர் தனது பல்சர் மோட்டார் சைக்கிளில் குறித்த தினம் இரவு வேளை தாவடியில் உள்ள கடையொன்றின் அருகில் நிறுத்திவிட்டு பெற்றோல் வாங்க சென்றுள்ளார்.

பெற்றோல் வாங்கிக்கொண்டு திரும்பி வந்து பார்க்கையில் மோட்டார் சைக்கிள் காணாமல் போயுள்ளது.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத்துறையில் வரலாறு கண்ட கலாநிதி வாமதேவா கணபதிப்பிள்ளை

கலாநிதி வாமதேவா கணபதிப்பிள்ளை மறைந்து ஒரு மாதமாகின்றது. 1969 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இணைந்து கொண்ட எமக்கு அவர் ஐரோப்பிய வரலாறு, நவீன வரலாறு சமகால விவகாரங்கள் ஆகிய பாடங்களில் விரிவுரையாளராக விளங்கினார். தனது கலாநிதிப்பட்ட ஆய்வை நிறைவு செய்து திரும்பிய பின்னர் எங்களுக்கு விரிவுரைகளை ஆரம்பித்திருந்தார்.

நல்ல சிவந்த நிறம், தலையின் முற்பகுதி வழுக்கை, குறுந்தாடி, புன்முறுவல், சிரித்திடும் கண்கள், தீர்ச்சண்யம் மிக்க பார்வை, அமைதியான சுபாவம் முகத்தில் புலமைத்துவத்தின் அடையாளம் இவை எல்லாம் ஆசானை எம்முன்னே நிறுத்துகின்றன. அவரது தோற்றம் மாக்ஸீய சிந்தனையாளர் V.I லெனினை எங்களுக்கு ஞாபகப்படுத்தும்.

வடலியடைப்பைச் சேர்ந்த அவரின் தந்தையார் வாமதேவா வியாங்கொடையில் ஓவஸியராக பணியாற்றிய போது அங்கே பிறந்த கணபதிப்பிள்ளை பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி அங்கே சிறப்புக்கலை பட்டதாரியாக வெளியேறினார்.

ஜேர்மனியில் உயர் கல்வியைத் தொடர்ந்து அவரைப் பேராதனைப் பல்கலைக்கழகம் வரலாற்றுத் துறையில் உதவி விரிவுரையாளராக அழைத்துக் கொண்டது. ஜேர்மனியில் இருந்து வந்தமையால் அவர்பெயரின் முன்னால் ஜேர்மன் கணபதிப்பிள்ளை என்பது இணைந்து கொண்டது.

உதவி விரிவுரையாளராகச் சில வருடங்களாகக் கடமையாற்றிய பின்னர் கலாநிதிப்பட்ட ஆய்விற்காக லண்டன் பல்கலைக்கழகம் சென்று அங்கு **ஒல்லாந்த கண்டிய உறவுகள்** என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டு வரலாற்றில் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகம் திரும்பிய அவர் சிரேஷ்ட விரிவுரையாளராகி தனது பல்கலைக்கழக சேவையை 65 வயதில் நிறைவு செய்தார்.

தொடர்ந்தும் கண்டி மீவத்தையில் 13 வருட காலம் வாழ்ந்து கடந்த மாதம் மார்ச் மாதம் 15 ஆம் திகதி அமரரானார். எமது பேராசான் இக்காலப் பகுதியில் வருகை விரிவுரையாளராக வரலாற்றுத் துறையில் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி கணபதிப்பிள்ளை பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் சுமார் நான்கு தசாப்தங்கள் விரிவுயையாளராகச் சிறப்பான பணியை ஆற்றியிருக்கின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புலமையாளர்களுள் அவர் விதந்து பாராட்டப்பட வேண்டியவர். பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தை முறையாகப் பயன்படுத்தியவர்களுள் அவரும் ஒருவர். தனது ஈடுபாடான துறை சார்ந்த எந்த புதிய நூலோ சஞ்சிகையோ வந்தால் முதலில் பதிவு செய்து எடுத்து படிப்பவர்களுள் அவரே முதன்மையானவர்.

எப்பொழுதும் வாசித்துக் கொண்டேயிருப்பது அவர் வழக்கம். அவரது விரிவுரைகளின் போது அவரின் புலமைத்துவத்தை பல்துறைசார் நிபுணத்துவத்தைக் கண்டு நாம் பல தடவை வியந்ததுண்டு. அறிவைத் தேடுதல் அவரது நிரந்தரத் தொழில். தான் பெற்ற அறிவை மாணவர்களுக்கு வழங்குவதில் தணியாத ஆர்வம் கொண்டவர்.

அந்தக் காலம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை கொடி கட்டப் பறந்த காலம். பேராசிரியர்கள் கார்ள் குணவர்த்தனா, லபுறோய், கே.எம்.டீ.சில்வா போன்றோர் வரலாற்றுத் துறைத் தலைவர்களாக இருந்து வழி நடத்திய காலம்.

பதினெட்டிற்கு மேற்பட்ட கலாநிதிகள், பல புகழ் பெற்ற பேராசிரியர்கள் அத்துறையை வளர்ச்சிப்படுத்திய காலம். அவர்களுள் ஒருவராக எமது அன்புக்குரிய ஆசிரியர் விளங்கினார்.

## மறைந்தார் மாண்பு

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு ஞானியாக, சித்தராக அவர் நடமாடித் திரிந்தவர். விரிவுரை தவிர்ந்த நேரங்களில் அதிகம் பேசமாட்டார். உதவி கேட்கும் எவருக்கும் மறுக்காமல் உதவி செய்யும் மாண்பு கொண்டவர். தனது மாணவர்களை என்றும் நினைவில் வைத்திருப்பவர்.

கலாநிதி கணபதிப்பிள்ளை பேராதனைப் பல்கலைக்கழக ஹில்டா ஒபயசேகரா விடுதியின் பொறுப்பாளராகக் கடமையாற்றியுள்ளார். எந்தப் பிரச்சினைகளிலும் அசாத்தியத் துணிவுடன் தலையிட்டுத் தீர்க்கும் வல்லமை கொண்டவர்.

சிங்களப் பிரதேசங்களில் ஆசிரியரின் பெற்றோர் கடமை ஆற்றியதால் சிங்கள மொழியை நன்கு பேசும், வாசிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அதனால் பல்லைக்கழக மாணவர்கள் பிரச்சினையில் எவ்வித தயக்கமுமின்றி நேரடியாகத் தலையிடும் துணிவைப் பெற்றிருந்தார்.

ஒருமுறை எங்களது சகவிரிவுரையாளரின் முதுதத்துவமாணி வாய்மொழித் தேர்வுப் பரீட்சையைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எமது வேண்டுகோளை ஏற்று பேராசிரியர் எஸ். பத்மநாதன், பேராசிரியர் ஏ.சிவராஜா ஆகியோருடன் இணைந்து அவ்வாய்மொழிப் பரீட்சையைச் சிறப்பாக நடத்தித் தந்திருந்தார்.

எமது ஆசிரியர் பெற்ற தாய் மீது அளவு கடந்த பாசம் கொண்டவர். தாயைத் தரிசிப்பதற்கான நேரம் கிடைக்கும் போது யாழ்ப்பாணம் வந்து செல்வது அவர் வழமை. தாய் மீது கொண்ட பாசம் தான் அவரது திருமண வாழ்வைத் தள்ளி வைத்ததோ என்று நாங்கள் பேசுவதுண்டு. லண்டன் பல்கலைக்கழகத்தில் அவருடன் சமகாலத்தில் கல்வி கற்றவர்கள் அவரது சமையல்கலை பற்றி சிலாகித்துப் பேசியதை நான் கேட்டிருக்கின்றேன்.

பல வருடங்களின் பின்னர் 2002 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நண்பன் சோதிநாதனின் வசிப்பிடத்தில் அவரையும் அவர் துணைவியாரையும் சந்திக்கும் வாய்ப்பை பெற்றிருந்தேன். மிக்க அன்புடன் என்னோடு அளவளாவியதையும் தனது மாணவன் வரலாற்றுப் பேராசிரியராகவும் உயர்பட்ட படிப்புக்கள் பீடாதிபதியாகவும் இருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

கொழும்பு- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் வரலாற்றுத் துறையினர் இணைந்து யாழ்ப்பாண. பல்கலைக்கழகத்தில் கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி நடத்திய கருத்தரங்கில் ஆரம்ப நிகழ்வாக கலாநிதி வா. கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவிற்கு மௌன அஞ்சலி நிகழ்த்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. எமது ஆசானின் நினைவைப் பேண ஒரு மகளும் மனைவியும் இருக்கின்றார்கள். மகள் திருமணமாகி ஐக்கிய அமெரிக்காவில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டு வருகின்றார். அவரது மூத்த சகோதரன் ஆர். கணபதிப்பிள்ளை எங்களது பல்கலைக்கழகத்தின் ஆங்கில உப துறையில் போதனாசிரியராகக் கடமையாற்றித் தற்போது வெள்ளவத்தையில் வசித்து வருகின்றார். ஆசிரியரின் சுக துக்கங்களை எனக்கு அறியத் தருபவராக அவர் செயற்பட்டிருக்கின்றார்.

ஆசிரியரின் இழப்பினால் துயருற்றிருக்கும் துணைவியாருக்கும் மகளுக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**கலாநிதி ச.சத்தியசீலன்**
**வரலாற்றுப் பேராசிரியர்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## வடமாகாண புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத்திணைக்களம், பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் தமிழ், சிங்கள புதுவருட விழாவும் பாரம்பரிய விளையாட்டுக்களும் கலை நிகழ்வுகளும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ். சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் கௌரவ விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## வடமாகாண தேர்தலில் கூட்டமைப்பிற்கு ஆதரவு

### ஜ.ம.முன்னணி அறிவிப்பு

கொழும்பில் தேர்தல்களின் போது தன்னை நிலைநிறுத்தியுள்ள தமிழ் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணி வடமாகாண சபை தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்து மென எதிர்பார்க்கப்படும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரான கலாநிதி என்.குமரகுருபரன் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எமது கட்சி வடமாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஆதரிக்கவுள்ளது.

பொதுவேட்பாளர் பட்டியலில் எமது கட்சி வேட்பாளர்கள் சேர்க்கப்படுவார்களா என்பதையிட்டு தீர்மானிக்கப்படவில்லை. எனினும் எமது கட்சி இந்த தேர்தலில் தனித்து போட்டியிடமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போது வடமாகாணத்திலுள்ள நிலைமையை கவனத்தில் கொண்டால் தேர்தலின் போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படுவது அத்தியாவசியமானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாண சபை தேர்தல் எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சீ.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆலோசித்து வருவதாக செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## பேருந்து தரிப்பிடம் அமையுங்கள்

(மல்லாவி)

மாங்குளம் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் செல்கின்ற பயணிகளுக்கான பேருந்து தரிப்பிடம் இல்லாமையினால் கொளுத்தும் வெய்யிலிலும் கொட்டும் மழையிலிலும் பயணிகள் பெரும் அவலங்களை எதிர்நோக்குகின்றனர்.

மாங்குளம் சந்தியில் ஏ-9 வீதி அகலிப்புக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருகின்ற பேருந்துப் பயணிகளுக்கான தரிப்பிடம் ஒன்று மாங்குளம் மக்கள் வங்கிக்கு அருகாமையில் இருந்தது.

பின்னர் ஏ-9 வீதி அகலிப்பின் காரணமாக அகற்றப்பட்டுவிட்டது.

இந்நிலையில் ஏ-9 வீதி புனரமைப்புப் பணிகள் முடிவுற்ற போதும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினாலோ அல்லது விளம்பர நிறுவனங்களாலோ பேருந்து தரிப்பிடம் ஒன்றாவது அமைக்கப்படவில்லை.

எனவே, பொது அமைப்புக்கள் மற்றும் விளம்பர நிறுவனங்கள் இதனை கவனத்தில் எடுத்து பேருந்து தரிப்பிடம் அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

## உயிரை பறித்த 200 ரூபா

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிலர் சூதாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது காணாமல் போன 200 ரூபா தொடர்பில் ஏற்பட்ட தர்க்கம் கொலையில் முடிந்த சம்பவமொன்று பிலியந்தலையிலுள்ள பட்டகெத்தர எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் தடிகள், கத்திகள் மற்றும் மண் வெட்டிகள் என்பவற்றை பயன்படுத்தி தமக்குள் சண்டையிட்டுள்ளனர். இந்தச் சண்டையில் டொன் வசந்த விஜேதுங்க எனும் தொழிலாளி உயிரிழந்துள்ளார். சண்டையிடும் போது காயமடைந்த மூவர் தற்போது களுபோவில போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் மூன்று பேரை கைது செய்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாயில் உள்ள ஈழ அகதிகளை இலங்கைக்கு அனுப்ப வேண்டாம்

## நாம் தமிழர்கட்சி மகஜர் கையளிப்பு

(சென்னை)

**ஐக்கிய அரபுக் குடியரசின் தலைநகர் டுபாயில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 19 தமிழீழ அகதிகளை எக்காரணம் கொண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பக்கூடாது என்று சென்னையில் உள்ள ஐ.நா.அகதிகள் ஆணையர் அலுவலக அதிகாரியிடம் நாம் தமிழர் கட்சி மகஜர் கையளித்துள்ளது.**

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, இலங்கையில் தங்களின் உயிருக்கும் வாழ்விற்கும் அச்சுறுத்தல் உள்ள நிலையிலேயே அங்கு வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு புகலிடம் தேடி வந்துள்ளனர்.

அப்படி தங்களுடைய எதிர்காலத்திற்காக அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற தமிழ் அகதிகள் 46 பேர், அவர்கள் பயணித்த படகு நடுக்கடலில் பழுதான நிலையில் சிங்கப்பூர் வணிகக் கப்பலால் காப்பாற்றப்பட்டு டுபாயில் உள்ள ஐ.நா. அகதிகள் அலுவலகத்தில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் 19 பேரை அமெரிக்காவிற்கும் சுவீடனுக்கும் அனுப்பி வைத்த ஐ.நா.அகதிகள் அலுவலகம் 6 பேரை அவர்களின் விருப்பத்திற்கு எதிராக இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அவர்களில் இரண்டு பேரை விசாரணை என்ற பெயரில் இலங்கை பொலிஸ்பிரிவு துன்புறுத்தி வருகிறது.

இந்த நிலையில் டுபாயிலுள்ள மேலும் 19 பேரை அவர்கள் விரும்பிய நாடுகளுக்கு அகதிகளாக அனுப்பி வைக்காமல் அவர்களின் விருப்பத்திற்கு எதிராக மீண்டும் இலங்கைக்கே அனுப்பி வைக்க டுபாய் பொலிஸ் பிரிவு முடிவெடுத்துள்ளது.

இப்படிப்பட்ட முடிவு ஐ.நா. அகதிகள் உடன்படிக்கைக்கும் ஐ.நாவின் உலகளாவிய மனித உரிமை பிரகடனத்திற்கும் எதிரானது. அந்த 19 பேரை எக்காரணம் கொண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பக்கூடாது என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மனுவின் பிரதிகள் சென்னையிலுள்ள ஐ.நா.அகதிகள் ஆணையர் அலுவலக அதிகாரி ஆர்.விஜித்ய பாரதியிடம் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் வழங்கினார்.

டுபாயில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்த 19 அகதிகளை இலங்கைக்கு திரும்பவும் அனுப்பி வைக்கக்கூடாது என்றும் அவ்வாறு செய்வது அவர்களை கொலைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு ஒப்பானது என்றும் ஐ.நா.அதிகாரியிடம் சீமான் கூறினார். (அ)

# மஹோற்சவம்

(புளியம்பொக்கணை)

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய வருடாந்த திருவிழா விஞ்ஞாபனம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை 12 நாட்கள் இடம்பெறவுள்ளது.

இவ்விழா நாட்களில் தினமும் பூஜைகளும் இடம்பெறுவதுடன் அம்பாள் வீதியுலா வருகின்ற நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-3-263)

# 'இணுவில் ஒலி' இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'இணுவில் ஒலி' என்னும் இருமாத இதழின் 4 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

மார்ச்– ஏப்ரல் மாதங்களுக்கான வெளியீடாக வெளிவந்திருக்கும் இவ் இதழ் நூற்றாண்டு வரலாறு கண்ட இராமநாதன் கல்லூரி, சங்க இலக்கியங்கள் சுட்டும் தந்தி வாத்தியங்கள் ஆகிய சிறப்புக் கட்டுரைகளோடு இன்னும் பல கட்டுரைகள், கவிதை, சிறுகதை, பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றை தாங்கி வருகின்றது. (அ-5)

# மத்தள விமான நிலையத்திற்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது விமான நிலைய சமையலறை மற்றும் ஏனைய பிரிவுகளையும் ஜனாதிபதி பார்வையிட்டதுடன் விமான நிலைய அதிகாரிகளுடனும் விமான நிலையத்துக்கு வந்திருந்த பொதுமக்களுடனும் அன்புடன் அளவளாவிய ஜனாதிபதி அவர்களுக்கு மலர்ந்த புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தத் திடீர் விஜயத்தின் போது அவரது மூத்த புதல்வனும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவும் உடன் சென்றிருந்தார்.

அத்துடன் கதிர்காமம் மகா தேவாலயத்துக்குச் சென்று தமிழ், சிங்கள புதுவருடத்துக்கான ஆசீர்வாதம் பெற்றதோடு மகா தேவாலயத்துக்கு வருகை தந்திருந்த பொது மக்களுடன் ஜனாதிபதி உரையாடி அவர்களுக்கு புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (அ)



தங்காலை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புலம்பெயர் வள நிலையம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கிராமங்களின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றுபடவேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் அலென்ரின் எம்.பி. தெரிவிப்பு

கிராமங்களின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதனூடாக கிராமத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறார்களின் கல்வி என்பனவற்றை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியுமென ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்(உதயன்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மறவன்புலோ பாரதி சனசமூகநிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமங்களின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும். அவற்றின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் எவரது செயற்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் எந்த காரணிகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் யுத்தத்தின் பின்பு கட்டியெழுப்பப்பட்டு வரும் பிரதேசங்களில் ஒன்றாக காணப்படும் மறவன்புலோ கிராம மக்களுக்குரிய அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அக்கிராமத்தின் தேவைகள் அனைத்தையும் நாம் நிறைவேற்றித் தருவோம் எனக் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள், பொது அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# அதிகாரிகளின் அசமந்தத்தால் சிறுபோக செய்கையில் தாமதம்

(புளியம்பொக்கணை)

இவ்வாண்டுக்கான சிறுபோக நெற் செய்கையை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகளை துறைசார்ந்த அதிகாரிகள் மேற்கொள்ளாமையினால் சிறுபோக நெற்செய்கைக்கான பருவகாலம் ஆரம்பித்துள்ள போதும் மேற்படி நெற்செய்கைகளை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்மடு நீர்ப்பாசன சிறுபோக நெற்செய்கை தொடர்பான அபிவிருத்தி கூட்டத்தில் சிறுபோக நெற்செய்கை கடந்த பங்குனி மாத இறுதிக்குள் அனைத்து விவசாயிகளும் சிறுபோக விதைப்பை பூர்த்தியாக்குதல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

எனினும் நீர்ப்பாசன திணைக்களத்தினரும் விவசாய அமைப்பினரும் அதற்கான ஏற்பாடுகளை பூர்த்தியாக்கித் தரவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக ஆரம்பகட்டமாக ஏற்பாடு செய்து தரும் கல்மடு குளத்து நீரைக்கூட திறந்து விடவில்லை என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இத்துறை சார்ந்த அதிகாரிகள் மேற்குறித்த விடயத்தை கவனத்தில் எடுத்து இதற்கான தீர்வை பெற்றுத் தரவேண்டுமென்பதே விவசாயிகளின் ஆதங்க கருத்தாகும். (அ-3-263)

# ஈரான் தென் கிழக்கில் பூமி அதிர்வு; 40 பேர் பலி

ஈரானின் தென்கிழக்கு பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் இடம்பெற்ற சக்தி வாய்ந்த பூமியதிர்ச்சி காரணமாக குறைந்தபட்சம் 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பூமியதிர்ச்சி ரிக்டர் அளவு கோலில் 7.8 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் எல்லையில் உள்ள காஷ் நகரிலிருந்து 86 கிலோமீற்றர் தொலைவில் இந்த பாரிய பூமியதிர்ச்சியின் தோற்ற மையம் காணப்பட்டதாகவும் மத்திய கிழக்கிலும் வளைகுடாவிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்மேற்கு ஈரானில் இந்த மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற 6.3 ரிக்டர் அளவிலான பூமியதிர்ச்சி காரணமாக குறைந்த பட்சம் 37 பேர் உயிரிழந்துள்ளதுடன் 850 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# லொறிக்குள் நசுங்குண்டு நான்கரை வயது சிறுமி பலி!

வலஸ்முள்ள, அத்கேந்த பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கரை வயது சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வீடொன்றிற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி பின்நோக்கி தள்ளப்பட்ட போது பின்புறம் இருந்த சிறுமி அதற்குள் நசுங்குண்டு படுகாயமடைந்துள்ளார்.

அதன்பின்னர் வலஸ்முள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுமி பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹக்மன, கரவல்பிட்ட வடக்கு பகுதியைச் சேர்ந்த சிறுமி பெற்றோருடன் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்த வேளை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வலஸ்முள்ள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் முழுவதிலும் பாலச்சந்திரனுக்கு சிலை

## அனுமதி வேண்டி கோரிக்கை மனு

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட சிறுவன் பாலச்சந்திரனுக்கு சேலத்தில் சிலை எழுப்புவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் மாவட்ட ஆளுநரிடம் கோரிக்கை மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

இது குறித்து கட்சியின் பொதுச் செயலர் வை.காவேரி, ஒருங்கிணைப்புச் செயலர் எம்.பி.காமராஜ் உள்ளிட்டோர் மாவட்ட ஆளுநரிடம் க.மகரபூஷணத்திடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கிய கோரிக்கை மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையில் அப்பாவித் தமிழ் சிறுவன் பாலச்சந்திரன் படையினரால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறான். இது தமிழகத்தில் வாழும் தமிழர்கள் மத்தியில் பெரும் அனுதாபத்தையும் இன உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்தே பாலச்சந்திரனின் நினைவைப் போற்றும் வகையில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பாலச்சந்திரனுக்கு சிலை வைக்க உள்ளோம் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் சேலம் ஐரோடு பகுதியில் பாலச்சந்திரனுக்கு சிலை வைக்க இடம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-5)

# முன்னெச்சரிக்கை இன்றி தாக்குதல் நடத்துவோம்

## வடகொரியா எச்சரிக்கை

(பியாங் யாங்)

முன்னெச்சரிக்கை எதுவுமின்றி தென்கொரியா மீது எந்நேரத்தில் வேண்டுமானாலும் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கொரியா தொடர்பில் வடகொரியாவின் நிலைப்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பேரணி ஒன்று தென் கொரியாவில் இடம்பெற்றதையடுத்தே வடகொரிய அரசு இவ் அதிரடி எச்சரிக்கையை விடுத்துள்ளது.

வடகொரியா என்ற தனி நாட்டை உருவாக்கிய கிம் இ சுங்கின் பிறந்தநாள் நேற்று முன்தினம் அந்நாட்டின் தலைநகர் பியாங் யாங்கில் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

அதேவேளையில் வடகொரியாவின் போர் மிரட்டலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக தென் கொரிய தலைநகர் சியோலில் அன்றைய தினம் கண்டன பேரணி ஒன்றும் நடைபெற்றுள்ளது.

இது வட கொரியாவின் கோபத்தை மேலும் தூண்டியுள்ளது. இதையடுத்து வட கொரியா அரசின் சார்பில் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில், தென் கொரியாவில் உள்ள பொம்மலாட்ட அதிகார வர்க்கத்தின் சார்பில் எங்களை எதிர்த்து நேற்று நடத்தப்பட்ட பேரணி கண்டித்தக்கது.

இந்த நேரத்தில் இருந்து எவ்வித முன்னெச்சரிக்கையும் விடுக்காமல் தென் கொரியா மீது எப்போது வேண்டுமானாலும் வட கொரியா அதிரடியாக தாக்குதல் நடத்தும் என எச்சரித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் கொரிய தீபகற்பத்தில் அமைதியை நிலை நாட்ட முயற்சித்து வரும் வேளையில் வடகொரியாவின் இந்த அறிவிப்பு போர் பதற்றத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# சிறைக்கு செல்ல 6 மாத அவகாசம் வேண்டும்!

## நடிகர் சஞ்சய் தத் கோரிக்கை

(சென்னை)

மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் சிறைத் தண்டனை பெற்றுள்ள நடிகர் சஞ்சய் தத் சிறைக்கு செல்வதில் 6 மாத கால அவகாசம் வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 1993 ஆம் ஆண்டில் நடந்த மும்பை தொடர் குண்டு வெடிப்பில் 251பேர் கொல்லப்பட்டனர்.

இந்த வழக்கில் ஹிந்தி நடிகர் சஞ்சய் தத் பயங்கரவாதிகளுக்கு புகலிடம் அளித்து ஆயுதங்கள் பதுக்கவும் உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

இதனையடுத்து இவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

எனவே இந்த தீர்ப்பின் அடிப்படையில் ஏற்கனவே அவருக்கு அவகாசம் அளித்து 18 ஆம் திகதி அவர் சிறை செல்ல வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த சஞ்சய் தத் நீதிமன்ற உத்தரவின் படி சிறை செல்வேன். தண்டனையை குறைக்க கோர மாட்டேன். இதுவரை என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள் என கண்ணீர் மல்க பேட்டியளித்தார்.

இந்நிலையில் இவர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் படப்பிடிப்பு தொடர்பாக இன்னும் வேலை இருப்பதால் உரிய நேரத்தில் சிறைக்கு செல்ல முடியவில்லை. இதனால் தமக்கு இன்னும் 6 மாதம் அவகாசம் வழங்க வேண்டும் என கோரியுள்ளார். இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# இந்திய எல்லையில் உளவுப் பறவை; இராணுவ அதிகாரிகள் அதிர்ச்சி

உடலில் படப்பிடிப்புக் கருவி மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்த நிலையில் இந்திய எல்லைப் பகுதியில் பறவையொன்று இறந்து கிடந்தமை குறித்து இராணுவ அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான பாலைவன எல்லைப் பகுதி ஜெய்பூர் அருகே உள்ள ஜெய்சால்மர் என்ற இடத்திலேயே மேற்படி கழுகைப் போன்ற பெரிய அளவிலான வல்லூறு எனப்படும் பறவை ஒன்று இறந்து கிடந்துள்ளதுடன் அந்தப் பறவையின் உடலில் படப்பிடிப்புக் கருவி மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இறந்து கிடந்த வல்லூறின் உடலில் பாகிஸ்தானில் உள்ள விலாசமும் தொலைபேசி இலக்கமும் சிவப்பு மையினால் குறிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்திய பகுதிகளை உளவு பார்ப்பதற்காக குறித்த பறவையை பாகிஸ்தான் அனுப்பி இருக்குமா என்ற கோணத்தில் இராணுவ அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

எனினும் வேட்டைக்காரர்கள் யாரேனும் இந்த பறவையை பயன்படுத்தி இருப்பார்களா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2010 ஆண்டில் புறாவின் காலில் படப்பிடிப்புக் கருவியை பொருத்தி இந்தியாவிற்குள் அனுப்பி பாகிஸ்தான் உளவு சேகரித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# விபத்துக்குள்ளானது உலங்குவானூர்தி

அமெரிக்காவின் இராணுவ உலங்கு வானூர்தி ஒன்று நேற்றைய தினம் வடகொரியா அருகே விபத்துக்குள்ளாகியுள்ளது.

அமெரிக்க மற்றும் தென் கொரிய இராணுவ உலங்குவானூர்திகள் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இந்த விபத்து நேரிட்டதாகவும் இந்த உலங்கு வானூர்தியில் 16 வீரர்கள் இருந்துள்ளனர்.

எனினும் தெய்வாதீனமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.


இருந்தபோதும் வீரர்கள் சிறிய காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# எதிர்க்கட்சித் தலைவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறை

குவைத் நாட்டு முன்னாள் எம்.பியும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருப்பவர் முசாலாம் அல்-பார்ராக். இவர் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடந்த பொதுக்கூட்டத்தில் இளவரசர் சாபாஹ் அல்.அகமது ஆட்சிக்கு எதிராக பேசினார்.

ஆட்சியாளர்கள் சர்வாதிகார போக்கை கைவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இது தொடர்பான வழக்கில் முசலாம் அல்-பார்ராக்கிற்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த தகவலை அரச சட்டத்தரணி நேற்று முன்தினம் தெரிவித்தார். இதனால் அங்கு பதற்றம் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (அ)



ஆப்கானிஸ்தானின் குணார் பகுதியில் அமெரிக்கப் படைகள் அத்துமீறி நிகழ்த்திய தாக்குதலை கண்டித்து மாணவர்கள் ஜலாலாபாத்தில் அமெரிக்க கொடிகளை எரித்து தங்களது எதிர்ப்பை தெரிவிப்பதை படத்தில் காணலாம்.

# வெனிசுலா தேர்தல் முடிவை மீள்பரிசீலிக்க கோரிக்கை

வெனிசுலாவில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் முடிவுகளில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் வாக்குகளை எண்ணும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் தேர்தலில் தோல்வியுற்ற ஹென்ரிக் காப்ரில்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெனிசுலா ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் கடந்த சனிக்கிழமையுன்று வெளியிடப்பட்டபோது நிக்கோலஸ் மதுரோ 3 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையிலேயே காப்ரில்ஸ் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தென் அமெரிக்காவின் எண்ணெய் வளமிக்க நாடான வெனிசுலாஜனாதிபதியாக இருந்தஹியூகோ சாவேஸ் (வயது 58) புற்று நோய் காரணமாக சமீபத்தில் உயிரிழந்தார். அவருக்கு பின்னர் இடைக்கால ஜனாதிபதியாக நிக்கோலஸ் மதுரோ பொறுப்பு வகித்தார்.

இந்நிலையில் அங்கு ஜனாதிபதியாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் நிகோலஸ் மதுரோ, ஹென்ரிக் காப் ரில்ஸ் ஆகியோர் போட்டியிட்டனர்.

தேர்தல்முடிவுகளைதேசியதேர்தல் பேரவைத் தலைவர் திபிசே லுசினோ கடந்த சனியன்று வெளி யிட்டார்.

இதனடிப்படையில் 50.66 சதவீத வாக்குகளை பெற்று மதுரோ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலில் காப்ரில்ஸ் 49.1 சதவீத வாக்குகளை பெற்றிருந்தார்.

வெறும் 3 இலட்சம் வாக்குகளே குறைவாக பெற்றுள்ள காப்ரில்ஸ் தேர்தல் முடிவுகளை ஏற்க மறுத்து மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு கோரிக்கை விடுத்துள்ளார் என தெரிய வருகின்றது. (அ-5)

# முதலில் விவாதிக்க அனுமதி மறுப்பு; சட்டசபையில் தே.மு.தி.க. வெளிநடப்பு

சட்டசபை விவாதத்தில் முதலில் பேசும் வாய்ப்பு வழங்கப்படாமையினால் தே.மு.தி.க. சட்டசபை உறுப்பினர்கள் சட்டசபையிலிருந்து வெளிநடப்பு செய்துள்ளதுடன் வேறு காரணங்களுக்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளும் வெளிநடப்பு செய்துள்ளனர்.

சட்ட சபையில் நேற்று கூட்டுறவு சங்க தேர்தல் பற்றி விவாதிக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் அனுமதி கேட்டுள்ளன.

இக்கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர் செல்லூர் ராஜி கூட்டுறவு சங்க தேர்தல் முறையாக நடந்து வருகிறது. இது குறித்து புகார் தெரிவிக்கலாம் என்று தெரிவித்த போதும் இது குறித்து விவாதிப்பதை அனுமதிக்காததை கண்டித்து குறித்த 3 கட்சிகளும் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதேவேளை, மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தே.மு.தி.கவுக்கு முதலில் பேச வாய்ப்பளிக்க வேண்டும் என்று அந்த கட்சியினர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்த போதும் சபாநாயகர் அதை ஏற்க மறுத்ததை அடுத்து தே.மு.தி.க. சட்டசபை உறுப்பினர்களும் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# ஆயிரம் கோடி ரூபா நிதியில் குடிநீர் திட்டம் அமையும்

முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சட்டசபையில் 110 ஆவது விதியின் கீழ் ஒரு அறிக்கை வாசித்தார். அதில் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப சென்னை மாநகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் வகையில் நெம்மேலியில் தற்போது நிறுவப்பட்டுள்ள கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் உள்ள 10.50 ஏக்கர் நிலத்தில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லீற்றர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக்கலையே நாகரிகம். முரண்பட்டப் பேச்சுக் கூட தொடர்பை வளர்க்கிறது. ஆனால் மௌனம் மக்களை ஒதுக்கி வைக்கிறது. -தாமஸ் பெய்ன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாழ்ப்பாண அரச அதிபருக்கு எழுதும் அவசர மடல்

யாழ்ப்பாண அரச அதிபருக்கு வணக்கம். தங்களுக்கு எழுதும் இவ் அவசர மடலை கருத்தில் எடுத்து அருள்புரிக.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் மிக மோசமான நிலைமை தோன்றியுள்ளது. இதில் கலாசார சீரழிவுகள் என்பதற்கப்பால் சிறுவர்கள் மீதான வன்மங்களும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் கண்டபாட்டில் நடந்தேறுகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதற்கும், சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்வதற்குமென உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்ற போதிலும், கைதடியிலுள்ள சிறுவர் இல்லமொன்றில் நடந்ததாகச் சந்தேகிக்கப்படும் சம்பவங்கள் இதயத்தை பிழியச்செய்யும்.

தங்களுக்கு நடக்கின்ற கொடூரங்களை எவரிடமும் சொல்ல முடியாமல் தவித்த சிறுமிகள், அந்த இல்லத்திலிருந்து தப்பியோடியுள்ளனர் என்றால் யாழ்ப்பாண செயலகத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் - கண் காணிக்கும் பிரிவும் அதற்கென அலுவலர்களும் தேவையா? என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

இவை ஒருபுறமாக இருக்க, மறுபுறத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் கால்நடை வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் - அவை எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி தாங்கள் எப்போதாவது கேட்டு அறிந்து கொண்டிருப்பீர்கள் என்று நாம் கருதவில்லை.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் ஒரு கால்நடை வைத்தியசாலை. அங்கு ஏதாவது சேவை நடைபெறுகின்றதா? என்பதை ஒரு கணம் நேரில் சென்று அறியுங்கள்.

யாழ்.மாவட்ட அரச அதிபர்களாகப் பலர் இருந்துள்ளனர். அதில் அண்மைக்காலத்தில் யாழ். மாவட்டத்தின் அரச அதிபர்களாக இருந்த கே.கணேஷ், திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் களத்தில் இறங்கி பொதுமக்களுக்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் செம்மையாக இயங்குகின்றனவா? என்பதைக் கண்காணித்தனர்.

ஆனால் தங்களுடைய நிர்வாகத்தில் உங்களின் செயலகக் கடமைகள் செம்மையாக நடந்தாலும் உங்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமை என்ன? என்பதை தாங்கள் அறிவதும் அது தொடர்பில் பொதுமக்கள் கொண்டுள்ள கருத்தியலை தெரிந்து கொள்வதும் தங்களின் முதன்மைப் பணி என்பதை நிர்வாகத் திறனுடைய தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு நிறையவே உண்டு.

எனவே யாழ்.மாவட்டத்தில் தற்போது எழுந்துள்ள பிறழ்வுகளும் நிர்வாகங்களின் தொய்வு நிலைமைகளும் எதற்கானது என்பதை நீங்கள் களத்தில் இறங்கிக் கண்டறியுங்கள்.

பொது மக்களை சந்தியுங்கள். அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை கேளுங்கள். இதன்போது நிலைமையை நீங்கள் முழுமையாக அறிய முடியும்.

விமர்சனத்திற்கு உட்படாமல் நிர்வாகம் நடத்துவது சாத்தியமாகுமாயின் மக்கள் பாவம் என்று சொல்வதைத் தவிர வேறு வழி இருக்க முடியாது.

# கடந்த வாரம் வவுனியாவில் திடீர் மரணங்கள் அதிகரிப்பு

## திடீர் மரண விசாரணை அதிகாரி தகவல்

(பூந்தோட்டம்)

கடந்த வாரம் வவுனியா வைத்தியசாலையில் நடத்தப்பட்ட மரண விசாரணைகளின் அடிப்படையில் திடீர் மரணங்கள் அதிகரித்து காணப்பட்டதாக திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் கடந்த 8ஆம் திகதி வவுனியா நாகர் இலுப்பைக்குளத்தை சேர்ந்த சிவபாதம் தனுசன் வவுனியா வைத்தியசாலையில் மரணமடைந்த நிலையில் சடலத்தினை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி கலாநிதி பி.எம்.ஜெயவர்த்தன றேபீஸ் காரணமாக ஏற்பட்ட மரணம் என தெரிவித்ததன் அடிப்படையில் றேபீஸ் காரணமாக இடம்பெற்ற மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேவேளை 9ஆம் திகதி மோகன் தமிழினி என்ற 7 வயது சிறுமி கிணற்றில் வீழ்ந்து இறந்துள்ளதுடன் இச் சடலத்தினை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி நீரில் மூழ்கியதனால் ஏற்பட்ட மரணம் என அறிக்கை சமர்ப்பித்ததன் அடிப்படையில் நீரிழ் மூழ்கியதனால் ஏற்பட்ட விபத்து மரணம் என தீர்பளித்துள்ளார்.

தாலிக்குளம் பூவரசன்குளத்தை ரோந்த செல்வி நடராஜன் சோபிகா என்ற 20 வயதுடைய யுவதியின் சடலத்தினை சட்டவைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை செய்ததன் அடிப்படையில் தூக்கில் தொங்கியதனால் ஏற்பட்ட மரணம் தற்கொலை என மரணவிசாரணை அதிகாரியான தன்னால் தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை நெடுங்கேணி வேலாங்குளத்தை சேர்ந்த 53 வயதுடைய செல்வி சுப்பையா கலாரஞ்சினி 85 வயதுடைய தாயாருடன் வசித்துவந்த நிலையில் பாத்திரம் கழுவுவதற்கு கிணற்றில் நீர் எடுப்பதற்கு சென்ற சமயம் கிணற்றில் வீழ்ந்து மரணித்ததாக தாயாரால் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் சடலத்தினை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய சட்டவைத்திய அதிகாரி ரி.பார்த்தீபன் நீரில் மூழ்கியதனால் ஏற்பட்ட மரணம் என அறிக்கையிட்டதன் அடிப்படையில் நீரில் மூழ்கிய தனால் ஏற்பட்ட விபத்து மரணம் எனதீர்ப்பளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த 12ஆம் திகதி வவுனியா செக்கடிப்பிளவில் 72 வயதுடைய திருமதி கந்தையா நல்லம்மா என்ற வயோதிப பெண் கிணற்றில் வீழ்ந்து இறந்ததாக சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ரி.பார்த்தீபன் மேற்படி மரணம் சேறு மற்றும் நீரினால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு இடம்பெற்ற மரணம் என தெரிவித்ததை அடுத்து சேறு மற்றும் நீரினால் இடம்பெற்ற மூச்சு திணறலால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-266)

# யாழ்ப்பாணத்திலும் விரைவில் பொது பல சேனா அலுவலகம்!

(யாழ்ப்பாணம்)

பொது பல சேனா அமைப்பின் கிளை அலுவலகம் ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை அந்த அமைப்பு தற்போது செய்து வருகிறது. இது தொடர்பில் அந்த அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் சிங்கள இணையம் ஒன்றுக்கு இவ்வாறு கருத்துத்தெரிவித்துள்ளார்.

சிங்களவர்களும் தமிழர்களும் ஐக்கியமாக ஒற்றுமையுடன் வாழ்வதற்கான திட்டமொன்றினைநம் முன்னெடுத்துள்ளோம்.

இதன் அடிப்படையில் நாம் யாழ்ப்பாணத்தில் எமது அமைப்பின் அலுவலகம் ஒன்றினைத் திறக்கவுள்ளோம்.

இது தொடர்பான எமது சமூக ஐக்கியக் கூட்டம் நாளை வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வடமாகாணத்துக்கான எமது பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என அவர் கூறியுள்ளார். (செ-1)

# புகலிடக் கோரிக்கையாளர்களின் உண்ணாவிரதம் வெற்றியளிக்காது

## அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவிப்பு

(சிட்னி)

அரசாங்கத்தின் கொள்கைகளை மாற்றுமாறு வலியுறுத்தி புகலிடக் கோரிக்கையாளர்கள் மேற்கொள்கின்ற உண்ணாவிரதம் வெற்றி அளிக்காது என அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

மெல்பேர்ன் தடுப்பு நிலையத்தில் உள்ள 27 புகலிடக் கோரிக்கையாளர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றதனைத் தொடர்ந்தே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இவர்கள் ஏன் உண்ணாவிரதம் மேற்கொள்கின்றனர் என்பதற்கு குடிவரவுத் திணைக்களம் கருத்து எதனையும் தெரிவிக்காது.

இதேவேளை அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என நம்பப்படுகின்றது.

ஆனால் இவர்களை சமூகத்தினுள் விடுவதற்கு பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி மறுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அடிப்படையில் அகதிகள் மதிப்பிடப்படுவதன் முக்கியத்துவத்தை பிரதமர் ஜூலியா கில்லார்ட் வலியுறுத்தியுள்ளார். மேலும் உண்ணாவிரதம் மேற் கொள்கின்ற அகதிகள் மிகவும் பலவீன மாக உள்ளனர்.

ஆனால் தற்போது இவர்கள் திரவ ஆகாரங்களை உட்கொள்வதாகவும் அகதிகளுக்கான நடவடிக்கை கூட்டமைப்பின் பேச்சாளர் அயன் ரின்றோல் தெரிவித்துள்ளார். (செ-1)


# யாழ்.விஞ்ஞான சங்கத்தினால் 20 ஆவது வருட நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினரின் 20ஆவது வருட நிகழ்வுகள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்திலும் விஞ்ஞான பீடத்துறை தொகுதியிலும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் [illegible] கலந்து கொள்ள [illegible]. (செ)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



## எப்படிச் சொன்னாலும் பலனுண்டு

பணக்காரன் வீட்டு வேலைக்காரி அந்த வீட்டின் வேலைகளை செய்தாலும் அவளுடைய சிந்தனையெல்லாம் தன் வீட்டின் மீதே இருக்கும். எஜமானின் குழந்தைகளையெல்லாம் தன் குழந்தையாகப் பாவித்தாலும் அக்குழந்தைகள் தனக்குச் சொந்தமானவர்கள் அல்ல என்பதை அவள் உள்மனம் நன்கு அறிந்திருக்கும். அதுபோல உலக வாழ்வில் ஈடுபட்டாலும் இறைவனே நமக்கு சொந்தமானவன் எனும் உள்ள உறுதியோடு வாழவேண்டும்.

மனம் பால் போன்றது. அதனைத் தண்ணீராகய உலகத்துடன் கலந்தால் இரண்டும் உடனே கலந்துவிடும். முதலில் பாலைக்காய்ச்சி உறைவிட்டு தயிராக்கினால் கடைந்துவிடலாம். கடைய கடையத் தயிரிலிருந்து வெண்ணெய் உண்டாகும். வெண்ணெய்யை நீரில் வைத்தால் அது நீருடன் கலப்பதில்லை. மிதக்கத் தொடங்கிவிடும். அதுபோல் பக்தியாகிய ஞானத்தைக் கடைந்தால் உலகமாகிய நீரில் மிதக்கலாம். உலகத்துடன் கலக்காமல் தனித்து நிற்கும் வலிமை உண்டாகும்.

தெரிந்து சொன்னாலும் தெரியாமல் சொன்னாலும் தன்னறிவில் சொன்னாலும் அறியாமல் சொன்னாலும் எந்த நிலையில் சொன்னாலும் பகவான் நாமத்தைச் சொன்னதற்கான பலன் ஒருவனுக்கு நிச்சயம் உண்டு. எப்படிச் சொல்லும்போது மலையளவு பாவங்கள் குவிந்திருந்தாலும் பஞ்சுப்பொதி மீதிட்ட நெருப்பினைப்போல் எரிந்து சாம்பலாகிவிடும.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடுத்தடுத்த குண்டுவெடிப்பால் திர்ந்தது மெரிக்கா

## மரதன் ஓடியவர்கள் சிதறி ஓடினார்கள்; 3 பேர் பலி! 140 பேர் காயம்!!

**அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் 3 பேர் உயிரிழந்தனர். 140 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 2001 ஆம் ஆண்டு இரட்டை கோபுர தாக்குதலுக்கு பிறகு அமெரிக்காவில் நடந்துள்ள பாரிய தாக்குதலாக இது கருதப்படுகிறது.**

**இந்த குண்டுவெடிப்பிற்கு ஐ.நா.,பொதுச்செயலாளர் பான் கீ மூன் உட்பட உலகத் தலைவர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாகாணத்தின் பொஸ்டன் நகரில், நாட்டுப் பற்று தினத்தை முன்னிடடு சர்வதேச மரதன் வீரர்கள் 27 ஆயிரம் பேர், பங்கேற்ற 42 கி.மீ. தூர மரதன் போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது. இப்போட்டியில் அனைவரும் வெற்றி இலக்கை நோக்கி ஓடிக் கொண்டிருந்தபோது, வீதியோரத்தில் பக்கவாட்டில் இருந்த பார்வையாளர்கள் பகுதியில் முதல் குண்டு வெடித்தது. இங்கு சுமார் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர். இந்தக் குண்டு வெடிப்பால் அங்கிருந்தவர்கள் அலறி அடித்து ஓடினர். மரதனில் பங்கேற்றவர்கள் மூலைக்கு ஒருவராக சிதறி ஓடத் தொடங்கினார்கள். அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளித்தது. இக்குண்டு வெடிப்பைத தொடர்ந்து அடுத்த சில விநாடிகளில் இரண்டாவது குண்டு, பெரும் சத்தத்துடன் வெடித்தது.

இவ்விரு குண்டு வெடிப்புச் சம்பவத்திலும் 8 வயது சிறுவன் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். 140இறகும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் பொஸ்டன் நகரில் வேறு இரண்டு இடங்களிலும் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து, நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டார். தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்டவர்கள் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் உறுதி அளித் துள்ளார்.

பொஸ்டன் நகரில் நிகழ்ந்தப்பட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து, அந்நகரில் விமானங்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டன. வோஷிங்டன், நியூயோர்க் உள்ளிட்ட முக்கிய நகரங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து, அமெரிக்க புலனாய்வு அமைப்பான எப் பி ஐ விசாரணை மேற் கொண்டு வருகிறது. இக்குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் சவுதி அரேபியாவைச் சேர்ந்த நபருக்கு தொடர்பு இருப்பதாகவும் எனினும், இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குண்டுவெடிப்பு தொடர்பாக செய்தியாளர்களிடம் விளக்கிய பாஸடன் நகர பொலிஸ் ஆணையர், குண்டுவெடிப்புக்கு முன்னதாக அச்சுறுத்தல் எதுவும் தங்களுக்கு வரவில்லை என்று தெரிவித்தார். மக்கள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொண்டுள்ள மசாசூட்ஸ் ஆளுநர் டேவல் பேட்ரிக், சந்தேகத்திற்கிடமான நபர்கள குறித்த தகவல்களை அளிக்குமாறும் தெரிவித்துள்ளார்.

## கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்பும் விவகாரம்;

# 400 கோடியை

## நீதிமன்றில் செலுத்துமாறு உத்தரவு!

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் மற்றும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்ப இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையுடன் (பி.சி.சி.ஐ) நிம்பஸ் நிறுவனம் ஒப்பந்தம் செய்தது. ரூ.2000 கோடிக்கான இந்த ஒப்பந்தம் 2010 முதல் 2014ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நிம்பஸ் நிறுவனம் சார்பில் பஞ்சாப் நசனல் வங்கி, யூனியன் பாங்க் ஒப் இந்தியா, இந்தியன் வங்கி ஆகிய 3 வங்கிகள் உத்தரவாதம் அளித்திருந்தது. கிரிக்கெட் சபைக்கு நிம்பஸ் நிறுவனம் முறையாக பணம் அளிககாததால் ஒளிபரப்பு உரிமைகளை 2011ஆம் ஆண்டு இரத்து செய்ததை தொடர்ந்து உத்தரவாத தொகையான ரூ.1,600 கோடியை கிரிக்கெட் சபைக்கு அளிக்க வங்கிகள் மறுத்தன.

இதை எதிர்த்து கிரிக்கெட் சபை மும்பை நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது. 3 வங்கிகளும் ரூ.400 கோடியை மேல் நீதிமன்றில் செலுத்த வேண்டும் என்றும் ஒப்பந்தம் தொடர்பான பிரச்சினை முடிந்த பிறகு அந்த பணம் வங்கிகளுக்கு திருப்பி அளிக்கப்படும் என்றும் மும்பை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

நீதிமன்றில் அளிக்கப்பட்ட தொகை மீண்டும் வங்கிகளுக்கு அளிக்க கூடாது என்று கிரிக்கெட் சபை உச்ச நீதிமன்றில் மனுதாக்கல் செய்தது. மனு மீதான விவாதத்தைத் தொடர்ந்து 3 வங்கிகளும் ரூ.400 கோடியை மும்பை மேல்நீதிமன்றில் 15 தினாங்களுக்குள் செலுத்த வேண்டும். பின்னர் அந்த தொகை கிரிக்கெட் சபை கணக்கில் செலுத்தப்படும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## இன்றைய ஆட்டங்கள்

PUNE WARRIORS INDIA Vs SUNRISERS HYDERABAD
மாலை 4 மணி

RAJASTHAN ROYALS Vs MUMBAI INDIANS
இரவு 8 மணி

## விரைவில் தவான் அணிக்கு;

# டுவிட்டரில் சொல்கிறார் மூடி!

சமீபத்தில் நடந்து முடிந்த அவுஸதிரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் 3ஆவது போட்டியில் அறிமுக வீரராக விளையாடிய ஷிகர் தவான், 187 ஓட்டங்கள் குவித்து அனைவரின் கவனத்தை யும் ஈர்த்தார். அப்போட்டியில் அவ ருக்கு காயம் ஏற்பட்டது. இதனால், கடந்த இரு வாரங்களாக ஐபிஎல் போட்டியல் தவான் பங்கேற்க வில்லை. இது தொடர்பாக டுவிட்டரில கருத்து வெளியிடடுள்ள ஹைதரா பாத் அணியின் பயிற்சியாளர் டாம் மூடி, இன்னும் 10 நாள்களுக்குள் அணிக்குத் திரும்பிவிடுவார் என்று தெரிவித்துள்ளார்.



# கோடிகளில் புரளும்...

கோடிக்கணக்கில் பணம் புரளும் ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. பொழுது போக்கான இந்த விளையாட்டுக்கு ரசிகர்கள் அதிக அளவில் ஆதரவு கொடுப்பதால் இந்தப்போட்டி மிகப் பெரிய வெற்றியை பெற்றுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் ஐ.பி.எல். போட்டிக்கான வருவாய் உயர்ந்த நிலையில் உள்ளது.

விளம்பரம் உட்பட பல்வேறு வகைகளில் பணம் கொட்டுகிறது. இதேபோல இந்த போட்டியை மையமாக வைத்து மிகப்பெரிய அளவில் சூதாட்டங்களும் நடத்தப்படுகிறது. எந்த அணி வெற்றி பெறும், அணியில் இடம்பெறும் வீரர்கள் யார்?, நாணயச் சுழற்சியில் வெல்லும் அணி எது, முதலில் துடுப்பெடுத்தாடும் அணி எது உட்பட பல வகைகளில் சூதாட்டம் நடைபெறுகிறது.

6ஆவது ஐ.பி.எல். போட்டியில் ரூ.40 ஆயிரம் கோடிக்கு சூதாட்டம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் நடந்த சூதாட்டத்தை விட தற்போது 25 சதவீதம் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. குஜராத் தேர்தலில் 5 ஆயிரம் கோடிக்கு சூதாட்டம் நடத்தப்படுகிறது. அதைவிட 8 மடங்கு அதிகமாக இந்த ஐ.பி.எல். போட்டியில் சூதாட்டம் இருககும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்த பட்ச தொகையாக ரூ.1000 கட்டினால் ரூ.2 ஆயிரம் கிடைக்கும்.

முதலாவது ஐ.பி.எல். போட்டியில் ரூ.6 ஆயிரம் கோடிக்கு சூதாட்டம் நடத்தப்பட்டது. சூதாட்ட தரகர்களின் தலைமையிடமாக ஐதராபாத் இருப்பதாக கூறப்படுகிறது. அத்துடன் குஜராத் மற்றும் ராஜஸ்தானில் மிகப் பெரிய அளவில் ஐ.பி.எல். சூதாட்டம் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பிடம் பணிந்தது கொல்கத்தா

கொல்கத்தாவுக்கு எதிரான பரபரப்பான போட்டியில் பஞ்சாப் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது




ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியின் 20-வது லீக் நேற்று மொகாலியில் நடைபெற்றது.

இப்போட்டியில் பஞ்சாப்-கொல்கத்தா அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி கேப்டன் காம்பீர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

அதன்படி பஞ்சாப் அணியின் கில்கிறிஸ்ட், மந்தீப் சிங் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினார்கள்.

கில்கிறிஸ்ட் 7 ரன்னில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த வோரா 17, ஹசி 12 மில்லர் 20,மகமூத் 0, குர்கீரத் சிங் 0 என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் மறு முனையில் மந்தீப் சிங் 41 ரன்கள் எடுத்தார். 8-வதாக களம் இறங்கிய கோணி 18 பந்தில் 42 ரன்கள் எடுக்க பஞ்சாப் அணி 9 விக்கெட் இழப்பிற்கு 157 ரன்கள் எடுத்தது.

கொல்கத்தா அணியின் சுனில் நரைன் 15 வது ஓவரில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தினார்.15 வது ஓவரின் 4-வது பந்தில் ஹசியும் 5-வது பந்தில் மேகமூத் 0, 6-வது பந்தில் குர்கீரத் சிங் 0 ஆகியோர் அவுட் ஆனார்கள். இந்த ஐ.பி.எல் போட்டியில் எடுத்த முதல் ஹாட்ரிக் இதுவாகும்.

158 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்காத்தா களம் இறங்கியது. ஆட்டத்தில் முதல் பந்தில் பிஸ்லா அவுட் ஆனார். அடுத்த வந்த கலிஸ் 1 ரன்னில் பவிலியன் திரும்பினார்.

3-வது விக்கெட்டுக்கு காம்பீர்-மோர்கன் ஜோடி சேர்ந்தனர். இருவரும் சிறப்பாக விளையாடி ரன் சேர்த்தனர். காம்பீர் 60 ரன்னிலும் மோர்கன்41 ரன்களிலும் அவுட் ஆனார்கள். அதன் பின் வந்த வீரர்கள் சரியாக விளையாடாததால் கொல்கத்தா அணி இரண்டு ஓவரில் 30 ரன் தேவைப் பட்டது.

19 வது ஓவரை அவான் வீசினார். பதானும் பாதியாவும் எதிர்கொண்டனர்.முதல் பந்தை பதான் பவுண்டரிக்கு விரட்டினார். இராண்டாவது பந்தில் ஒரு ரன் எடுத்தார். 3 வது பந்தில் பாதியா இமாலய சிக்சர் விளாசினார். 4 வது பந்தில் 2 ரன் எடுத்த அவர் 5 வது பந்தையும் சிக்சருக்கு விரட்டினார். ஆனால் கடைசி பந்தில் போல்டாகி வெளியேறினார். அவர் 6 பந்தில் 16 ரன் குவித்தார்.

கடைசி ஓவரில் கொல்கத்தா அணி வெற்றி பெற 11 ரன் தேவைப்பட்டது. பிரவீன் குமார் பந்து வீசினார்.

முதல் பந்தில் எக்ஸ்ட்ரா(ஒயிடு) ஒரு ரன் கிடைத்தது. முதல் பந்தில் இரண்டு ரன் கிடைத்தது. இந்த ரன்னும் லெக் பைஸ் மூலம் கிடைத்தது. 2-வது பந்தில் பதான் அவுட் ஆனார்.

இதனால் 4 பந்தில் 8 ரன் தேவைப்பட்டது.

3-வது பந்தில் செனநாயக்க ஒரு ரன் எடுத்தார்.4-வது பந்தில் நரைன் ஒரு ரன் எடுத்தார்.5 வது பந்தில் செனநாயக்க ரன் அவுட் ஆனார். இதனால் கடைசி பந்தில் சிக்ஸர் அடித்தால் வெற்றி என்ற நிலை ஏற்பட்டது.

கடைசி பந்தி ஒயிடாக வீசினார். இதனால் ஒரு பந்தில் 5 ரன் தேவைப்பட்டது. கடைசி பந்தில் நரைன் ரன் ஏதும் எடுக்கவில்லை. இதனால் பஞ்சாப் அணி 4 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பஞ்சாப் அணி பெற்றுள்ள 2-வது வெற்றி இதுவாகும். போட்டியின் ஆட்ட நாயகனாக பஞ்சாப் அணியின் கோணி தெரிவானார்.

# சுப்பர் ஓவரில் பெங்களூர் வெற்றி



விறுவிறுப்பான சுப்பர் ஓவரில் பெங்களூரு அணி திரில் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல் சீசன் 6 ஆவது கிரிக்கெட் திருவிழாவில் நேற்று நடைபெற்ற 21 ஆவது லீக் போட்டியில் டில்லி அணியும் பெங்களூரு அணியும் மோதின.

முன்னதாக நாணச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூரு அணித் தலைவர் விராட் ஹோலி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனையடுத்து களமிறங்கிய டில்லி அணி நிர்ணயித்த 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 152 ஓட்டங்களை பெற்றது.


153 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய பெங்களூரு அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 152 ஓட்டத்தினையே பெற்றது.

இதனை அடுத்து ஓட்டங்கள் சமநிலையில் முடிபடைய சுப்பர் ஓவர் தீர்மானிக்கப்பட்டது.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி டி வில்லியஸின் இரண்டு சிக்ஸ்சர் உட்பட 15 ஓட்டத்தினை குவித்தது.

16 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய டில்லி அணி ஒரு ஓவரில் 11 ஓட்டத்தினை மாத்திரமே பெற்று தோல்வி அடைந்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பெங்களூரு அணித் தலைவர் விராட் ஹோலி தெரிவானார்.




# காணாமல்போன 16 சிறுமி...

ஊடகங்களுக்கு தகவல் கொடுக்க மறுத்து விட்டனர். அத்தோடு கைதடி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற சம்பவங்களை மூடி மறைக்க முற்பட்டனர்.

பொலிஸ் தரப்பின் ஊடாக தகவலை உறுதிப்படுத்த ஊடகங்கள் முற்பட்டபோதும் சாவகச்சேரி பொலிஸார் இந்த விவகாரத்தைக் கைவிட்டு விடுமாறும் வலியுறுத்தினர்.

அதுமட்டுமன்றி பொலிஸ்மா அதிபரிடம் சென்று தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறி தாம் தப்பித்துக் கொள்ள முற்பட்டனர்.

ஊடகங்களுக்கு தகவல் கொடுக்கும் அதிகாரம் சாவகச்சேரி பொலிஸாருக்கு மட்டும் மறுக்கப்படுவது ஏன்? கடந்த காலங்களில் சாவகச்சேரி பொலிஸாரிடமிருந்து பல தகவல்களை ஊடகங்கள் பெற்றுக் கொண்ட நிலையில் சிறுவர் இல்ல விவகாரம் தொடர்பில் மட்டும் தகவல்கூற மறுப்பு தெரிவிப்பதற்கான காரணம் என்ன என ஊடகவியலாளர் வினவியதையடுத்து ஒரு சில தகவல்களை மட்டும் வெளியிட முன்வந்தார் சாவகச்சேரி பொலிஸ் பதில் பரிசோதகர் ராஜசிங்க,

அவர் கொடுத்த தகவலின்படி, குறித்த சிறுவர் இல்லத்தில் 16 சிறுமிகள் வெளியேறி காணாமல் போயுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் காணாமல் போனதாக கூறப்படும் சிறுமிகளின் 7 பேர் நேற்று முன்தினம் இரவே மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று 7 சிறுமிகளும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனரா? இல்லையா? என்ற தகவல் அறியப்படவில்லை.

இல்லத்திலிருந்து 10 சிறுமிகள்தான் காணாமல் போயுள்ளனர் என சிறுவர் இல்லத்தின் பொறுபதிகாரி தெரிவித்திருந்த நிலையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் 16 பேர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.

மேலும் சிறுமிகள் காணாமல்போன விடயம் தொடர்பில் விசாரணை மேற் கொள்வதற்காக இல்லத்தின் பொறுப்பதிகாரியை பொலிஸார் நேற்று சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இதேவேளை இல்லத்திலிருந்து வெளியேறிய சிறுமியர்களினால் பொலிஸ் நிலையத்திலும் பிரதேச செயலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கைதடி சிறுவர் இல்லத்திலிருந்து காணாமல்போன சிறுமிகளில் 7 பேர் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்னர் என்ற தகவலை யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா உறுதிப்படுத்தியிருந்தார்.

அதேவேளை மாங்குளம் பகுதியில் வைத்து 3 சிறுமிகள் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டு சாவகச்சேரி பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்ற தகவல் கிடைக்கப் பெற்றதையடுத்து அந்தத் தகவலை உறுதிப்படுத்த அவருடன் தொலைபேசி ஊடாக தொடர்பினை ஏற்படுத்தியிருந்தோம் இருப்பினும் அவர் தொலைபேசி அழைப்பினை துண்டித்து விட்டார்.

இது தவிர இல்லத்தை விட்டு வெளியேறிய சிறுமியர்களில் இருவர் அன்றைய தினமே இல்லத்திற்கு திருப்பிவிட்டதாகவும் தகவல் கிடைத்து இருப்பினும் ஒருவர் மட்டுமே இல்லத்திற்கு திரும்பியதாக பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் மாலை தெரிவித்திருந்தார் (கைது செய்யப்பட முன்)இவ்வாறு கைதடி சிறுவர் இல்ல விவகாரம் பல சர்ச்சைகளை ஏற்படுத்திள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை ஜெயகுரு



*கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வேலாயுதபிள்ளை ஜெயகுரு அவர்கள் 15.04.2013 அன்று அகால மரணமடைந்தார்.*

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் வசந்தி ஆகியோரின் அன்பு மகனும், ராஜினியின் அன்புக் கணவரும், பிரின்சிகாவின் அன்புத் தந்தையும், விஜயம்-செல்வராணி ஆகியோரின் அன்பு மருமகனும், அமரர் இராஜகுரு, ஞானகுரு (லண்டன்), ஜானகி, குமரகுரு(லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரரும்,

பாலச்சந்திரா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலகம்), சுதாமதி(லண்டன்), வேலழகன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்) மற்றும் விமலினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.04.2013 இன்று பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளவும்.

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கோரிக்கையை...

ராஜபக்ஷவைச் சந்தித்தபோது இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தெரிவித்தபோதே, தமிழர் தரப்புக் கோரிக்கையை கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு நிராகரித்துள்ளார்.

தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் கோத்தபாய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

இலங்கையில் போருக்குப் பின்னரான கண்ணிவெடி அகற்றல் மீள் கட்டுமானம் மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ, இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித பணிகளையும் மக்களுக்குச் செய்யவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதேவேளை பொறுப்புக்கூறல் விவகாரம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது, உலகம் முழுவதும் கைது செய்யப்பட்டவர்களை இரகசியத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருக்கும் அமெரிக்கா பொறுப்புக்கூறும் விவகாரம் குறித்து இலங்கை அரசாங்கத்திடம் எவ்வாறு கேள்வி எழுப்ப முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இறுதிக் கட்டப் போரின் போது படைத்தரப் பினரிடம் சரணடைந்தவர்களை மட்டுமே அரசாங்கம் புனர்வாழ்வளித்து விடுதலை செய்யவில்லை எனக் குறிப்பிட்ட கோத்தபாய ராஜபக்ஷ,

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களையும் அரசாங்கம் விடுவித்துள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சி தொடர்பில் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் கடும் அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றமை தெரிந்ததே. (செ-11)


## உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு கட்டாரை தலைமையகமாகக் கொண்டு 2006ஆம் ஆண்டு முதல் இயங்கும் **Morning Star Trading & Contracting** கம்பனியில் மத்திய கிழக்கில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

| தொழில் | எண் | சம்பளம் (ரூ) |
|---|---|---|
| 1.மேசன் | 20 | Rs. 41,400 |
| 2.தச்சு தொழிலாளி | 20 | Rs. 41,400 |
| 3. உருக்கு பொருத்துபவர் | 25 | Rs. 41,400 |
| 4.HVAC தொழிநுட்பவியலாளர் | 05 | Rs. 48,300 |
| 5.பிளம் பேர்ஸ் | 05 | Rs. 41,400 |
| 6.HVAC Duct தொழிநுட்பவியலாளர் | 05 | Rs. 41,400 |
| 7.எலக்ரீசியன்ஸ் | 05 | Rs. 41,400 |
| 8.வெல்டேஸ் | 05 | Rs. 44,850 |
| 9.உதவியாளர்கள் | 10 | Rs. 25,875 |
| 10.பெயின்ரர் | 05 | Rs. 37,950 |

நிபந்தனைகள்

★ இரண்டு வருட கால ஒப்பந்தம் ★ விசா இலவசம்

★ மருத்துவ வசதி, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும்

★ ஒப்பந்த காலத்திற்குள் அனைத்து வேலையாளருக்குமான காப்புறுதி.

(2386)

மேலதிக தொடர்புகளுக்கு:

அ.ஸ்ரனிஸ்லாஸ் 0779119075

## கனடாவில் படிக்க உழைக்க

அரிய வாய்ப்பு

மிகமிகக் குறைந்த கட்டணத்தில்

ஆலோசனை.

25.04.2013 வரை மட்டுமே இச்சலுகை.

தவறவிடாதீர்கள்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



(சி-3002)

021 221 9016, 021 568 9090

## உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு மற்றும் செல்வந்த நாடு களில் பெண்களுக்கான/ Couples திருமணமான தம்பதியினர்களுக்கும் உடனடி வேலைவாய்ப்பு. செல்வந்த நாடுகளில் பாதுகாப்பான செல்வந்த வீடுகளில் தொழிலொன்றை பெற்றுக் கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் விண்ணப்பங்கள் கீழ்காணும் முகவரியில் எதிர்வரும் 21.04.2013 காலை 9.00மணி முதல் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: LANKA VOICE

(சி-3015) 0777 950 952

## மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

Welders 20பேர் உடனடியாக தேவை. ஒட்டுநர் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களா? நீங்கள் அப்படி என்றால் ஒட்டுநர் துறையில் அதி உயர் சம்பளத்துடன் மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக தயாராகுங்கள். 3 வருட ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் LANKA VOICE நிறுவனத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

(சி-3014)

மேலதிக விபரங்களுக்கு: 077 6439204

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்



(C-3010)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062


# இலங்கையில் மனித...

போன்றவை தொடர்பில் திருப்தி அடைய முடியாது என பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சட்டவிரோத ஆட்கடத்தல்கள் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மீதான ஒடுக்குமுறைகள் உள்ளிட்ட பாரிய மனிதவுரிமை மீறல் சம்பவங்கள் 2012 ஆம் ஆண்டிலும் இடம் பெற்றுள்ளதாக பிரித்தனியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகம் குற்றம் சுமத்தியுள்ளது.

அதேவேளை 2011 ஆம் ஆண்டில் காணாமல் போன லலித்குமார் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பில் காத்திரமான விசாரணைகள் எதுவும் நடத்தவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகம், இலங்கையில் மனிதவுரிமை மேம்பாடு மற்றும் ஜனநாயகம் போன்றவற்றில் பொதுநலவாய அமைப்பின் கொள்ளைகளை பின்பற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களை மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரித்தானியா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இடைக்கால நிர்...

செப்ரெம்பரில் தேர்தல் நடத்துவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது எனவும் தற்போது 2013-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் ஏன் காலம் தாழ்த்துகிறது என்பது புரியவில்லை என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த இந்த குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட்ட தமிழர் தரப்பு பிரதிநிதிகள் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனக் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-11)

# அனைத்து சிறுமி...

இல்லத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஊடாக விசாரணை நடத்தியதாகவும் சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் திருமதி சாந்தசீலன் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.(செ-6)

# எங்கள் பிரச்சினை...

அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ-11)


## FALC FRENCH LANGUAGE CENTRE

யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்

FRENCH CLASSES

Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 200[illegible] University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).

690 க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்..

ஆரம்பம்: 20.04.13 Sat 2 pm
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)

ஆரம்பம்: 23.04.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

T.P. 0779 789 456

English (A1,B1,IELTS), Italian, Deutsch, Sinhala வகுப்புக்களும்...

(2990)


## மரண அறிவித்தல்

# தளையசிங்கம் தவலிங்கம்



நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிட்சர்லாந்து ஸ்தாபியோவை வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் தவலிங்கம் அவர்கள் 12.04.2013 அன்று காலமானார்.

அன்னாரின் காலஞ்சென்ற தளையசிங்கம்(நீர்வேலி மேற்கு)-தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சண்முகநாதன் (மானிப்பாய்), தங்கமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும், துஸாந்தி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,

தனுஷன், அனுஷன், விதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

வசந்தி(சுவிஸ்), பார்த்தீபன் (சுவிஸ்), புனிதா(சுவிஸ்), கலா(இலங்கை), வதனன் (லண்டன்)ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

ஐங்கரன்(பிரான்ஸ்), துஸ்யந்தி (லண்டன்), காலஞ்சென்றவர்களான ஜோன் இராஜேஸ்வரன், தர்மலிங்கம்(சுவிஸ்) மற்றும் சந்திரன்(இலங்கை), லக்ஷி (சுவிஸ்), நந்தினி(இலங்கை) ஆகியோரின் மைத்துனரும்,

மதி(பிரான்ஸ்), சந்திரன்(லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகனம்

திகதி: புதன்கிழமை 17.04.2013 02.00 பி.ப- 04.00 பி.ப

முகவரி: Cimitero Di Mendrisio Via San Martino 6850 Mendrisio

(சி-3019)

**தகவல்: சிவராசா குடும்பத்தினர்**

0775296797, 0779004025, 0774251826

தொடர்புகளுக்கு:

| | | | |
|---|---|---|---|
| சாந்தி-சுவிட்சர்லாந்து | +41916472871 | துஸ்யந்தி-பிரித்தானியா | +442035567450 |
| பார்த்தீபன்-சுவிட்சர்லாந்து | +41765189991 | ஐங்கரன்-பிரான்ஸ் | +33625362234 |
| வசந்தி-சுவிட்சர்லாந்து | +41449415516 | சண்முகநாதன்-இலங்கை | +9477204969 |
| புனிதா-சுவிட்சர்லாந்து | +41448103184 | கலா-இலங்கை | +94778991163 |

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org